The Journal of
The Tanjore Maharaja Serfoji's
Sarasvati Mahal Library

EDITED BY

N. KANDASWAMY PILLAI,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXV

No. 2

PUBLISHED ON BEHALF OF

THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1972

Śaka 1894

Annual Subscription Rs. 4.

The following back numbers of the Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library are available for sale :—

Vol.	X	Number	1, 2 & 3	Price	Rs. 4—00
„	XI	„	„	...	„ 4—00
„	XII	„	„	...	„ 4—00
„	XIII	„	„	...	„ 4—00
„	XIV	„	„	...	„ 4—00
„	XV	„	„	...	„ 4—00
„	XVI	„	1 & 2	...	„ 3—00
„	XVIII	„	1, 2 & 3	...	„ 4—00
„	XIX	„	„	...	„ 4—00
„	XX	„	„	...	„ 4—00
„	XXI	„	„	...	„ 4—00
„	XXII	„	„	...	„ 4—00
„	XXIII	„	„	...	„ 4—00
„	XXIV	„	„	...	„ 4—00

(Postage Extra)

Two copies of each book have to be sent for review in the Journal. Articles published in this Journal can be reproduced with the permission of the Editor. All communications regarding the Journal may be addressed to :—

THE EDITOR,
The Journal of the T. M. S. S. M. Library,
THANJAVUR, Tamil Nadu. (India)

The Journal of The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

EDITED BY

N. KANDASWAMY PILLAI,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Thanjavur.

Vol. XXV

No. 2

PUBLISHED ON BEHALF OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY

A. D. 1972

Śaka 1894

Annual Subscription Rs. 4.

CONTENTS

—o—

Page

1 Editorial ... i—ii

2 சரப புராணம் ... 49—64

—V. Chockalingam, Vidvan, Tamil Pandit,
Sarasvati Mahal Library.

3 சிவபாரத சரித்திரம் ... 29—52

—M. Seeralan, Assistant Librarian,
Sarasvati Mahal Library.

4 பத்தியமும் அபத்தியமும் ... 13—36

—C. Rajarajesvara Sarma, Ayurveda Siromani,
Junior Research Officer, L. R. U.,
Sarasvati Mahal Library.

5 किरातार्जुनीय निरूपण — श्रीशरभेन्द्रविरचित ... 23—32

पञ्चाक्षरी विभूति शिवरात्रि निरूपण- do- ... 33—38

—T. R. Bhima Rao, Marathi Pandit,
Sarasvati Mahal Library.

6 पूर्वमीमांसागुच्छः-अधिकरणविचारः

वषट्काराधिकरणविचारः ... 17—19

द्वादशलक्षण्यर्थसंक्षेपः ... 20—30

—N. S. Devanathachariar, Siromani,
Retd. Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

7 आख्यातवादटिप्पणम् ... 33—50

—N. K. Ramanuja Tatachariar, Siromani,
Sanskrit Pandit, Sarasvati Mahal Library.

8 From our Visitors' Book i—vi

FORM IV

(See Rule 8)

1. Place of Publication:	Thanjavur.
2. Periodicity of its publication:	Three issues a year.
3. Printer's Name:	The Sri Vani Vilas Syndicate Ltd., Srirangam.
Whether citizen of India:	Yes.
Address:	Srirangam, Tiruchirapalli - 6.
4. Publisher's Name:	Honorary Secretary, Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library, Thanjavur.
Whether citizen of India:	Yes.
Address:	Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal, Library, Sarasvati Mahal, Thanjavur.
5. Editor's Name:	N. Kandaswamy Pillai
Whether citizen of India:	Yes.
Address:	Honorary Secretary, Sarasvati Mahal Library, Thanjavur.
6. Names and addresses of individual who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital:	Administrative Committee, Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.

I, N. Kandaswamy, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

N. KANDASWAMY,
Honorary Secretary.
(Signature of Publisher)

Date: 15—4—'72.

The Journal of
The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library

Vol. XXV A. D. 1972 Śaka 1894 No. 2

EDITORIAL

We are placing before our readers the second issue of Volume XXV of our Journal for their usually kind reception. The serial articles and small works which have been appearing regularly in the past issues are almost nearing completion and it is our intention to complete all of them in the third issue which will appear soon, so that Volume XXVI, which will be our Silver Jubilee Number, may start with fresh serials. We also propose to release, along with the next issue of this Volume, as an appendix, a complete index of the serial articles and other contributions contained in Volumes I to XXV, so that it may serve our readers as a consolidated Reference Index to the Journals issued so far.

The Epic poem, *Śarabhapurāṇam*, edited by our Tamil Pandit, Vidvan Chockalingam, and the Tamil prose version of the historical Sanskrit poem, *Śivabhārata Caritam*, of Kavīndra Pramānanda, edited by Thiru M Seeralan, our Assistant Librarian, are continued in the Tamil section

The Guide book on Dietetics, *Pathyāpathya*, dealing with the healthy and unhealthy qualities of the several common articles of food, published with the original Sanskrit texts from the great Ayurvedic Classics, with an easy rendering in Tamil, follows.

Our Journal is regularly keeping up before our readers, the literary personality of Raja Serfoji, the scholar king, through his composition aptly edited by our Marathi pandit, Thiru T. R. Bhima Rao. Musical expositions of two famous Purāṇic episodes by the Raja, one *Kirātārjunīya Nirūpaṇa* and the other *Pañcākṣarī Vibhūti Śivarātri Nirūpaṇa*, are included in this issue.

On the Śāstraic side, the erudite monograph on *Ākhyātārthavāda*, a highly polemical topic in the Science of Logic, which will be as rich a feast to the scholar in Nyāya, as it may be a puzzle to the lay reader, is continued by our Sanskrit Pandit, Thiru N. K. Ramanuja Tatachariar.

Thiru N. S. Devanathachariar, Retired Sanskrit Pandit of our Library, carries on his *Pūrvamīmāmsa guccha* in this issue, completing the polemical pamphlet on *Vaṣaḍkārādhikaraṇavicāra* and by contributing *Dvādaśalakṣaṇyartha saṁkṣepa*. a simple and brief digest of the contents of the 12 *Adhikaraṇas* of the *Mīmāmsā Sūtras* of Jaimini.

We wish to record here one of the most outstanding events pertaining to the period coinciding with the issue of this number. The first International Sanskrit Conference, conducted at Delhi under the joint auspices of the Government of India and the Unesco from 27th to 31st March this year and the Exhibition of Manuscripts, conducted in connection with it, are events of very great importance in the development of Sanskrit language and of the ancient Indian culture. It has created a common meeting ground for all the scholars and savants of Sanskrit from several parts of the world and has laid the foundation for the developement of Sanskrit, not only as means of integration of India, but also as a cultural link between the several nations of the world. Although, on account of unavoidable circumstances, Sarasvati Mahal Library could not enjoy the honour and privelege of actually participating in the proceedings of the great conference at Delhi, our admiration of the great leaders of culture who sponsored it and our prayerful wishes for its happy conclusion and the speedy fulfilment of the ideals that inspire its sponsors are none the less sincere on that account.

We, now, take leave of our readers till we meet again through our next issue.

N. KANDASWAMY,
Honorary Secretary,
T. M. S. S. M. Library.

Thanjavur
30—3—1972

வுருபடையுஞ் சலந்தரனும் வருந்தன்மை யறமுதல்வ
னொருகடலன் றுசவுவிட முண்டொழித்தா னெனக்கருதி
யிருநிலனிற் கடலனைத்து மெவ்வுலகு மழிப்பதொரு
பெருவிடங்கொண் டிறைவன்பாற் பெயர்ந்தெய்த னிகர்க்குமால். கசு

மனத்தாலுங் கருதரிய வருதினிதற் சூழ்போதத்
தனைத்தானே யனையானைத் தழனகையாற் புரமெரிய
நினைத்தா(னை யகிலத்)தியா மடைந்த(வனுக்) கெதிர்நின்று
சினத்தா(லு மம)ர்புரிவோ மெழுகவெனச் செப்புதலும். கஎ

பதங்களைக்கண் பறித்தவன்றன் பல்லுகுத்த பரன்மேருக்
கதங்(கொ)டுநிற் பதுவுபோலுங் காரசுரன் றனைநோக்கி
மதங்கதுவு மிவன்மடியான் மற்றொருவ ராலயனற்
புதந்தருநல் வரமுலகிற் புரிந்திடவும் வேண்டுமால். கஅ

என்றுதிரு வுளந்துன்னி யிமையமக ளருணந்தி
துன்றுகண மாறுமுகன் றும்பிமுகன் சூழ்ந்தேத்த
வன்றவனைப் பார்த்தமரா லாவதுவென் கணையாலு
(முன்ற)னுடல் பிளந்திறந்தா லுறுபயனென் னுரையென்றான். கக

அருள்செய்த திருவார்த்தை யழற்கொளுவுஞ் சுடர்வேலை
யிருசெவியின் வைத்தனபோ லெய்துதலும் பொய்தவரு
நிருதரதி பதியுமெதிர் நேர்நின்று நிகழ்த்துவான்
பொருதிறமை யுரையார்கள் போர்த்தொழிற்கு மிக்குயர்ந்தோர். எ௦

குலிசமிடி (ப)ணையபடை கொடுகடிய நேடுதிறல்
வலிமறுவு மமர்புரிய வருகவென வுரைசெயலும்
பொலிவதிகழ் கமலநிகர் பொற்பதப்பே ரங்குலிகொண்
(டெ)டாலிகடலிற் கூடிதுகொடி துறுநேமி சமைத்தருளி. எக

தக்கனுக்கு மகத்திற்குஞ் சமனுக்கும் புரங்களுக்கு
மிக்கபகை புரியமலன் மேதினிகட் கிடர்விளைக்கு
மக்கொடியோர்ப் பார்த்துத்தா ளங்குட்டத் தாழியிற்செய்
சக்கரத்தை யீங்கெடுக்குந் தகைமையுள தோவிலதோ. எஉ

தரிக்கவலி யுடைமையெனிற் சமர்க்கெதிரி சக்கரத்தைப்
பரிக்கவரி தெனிலுனுயிர் பரித்தகல்வா யெனவுலகை
யெரிக்குமிவ னெனவிழிக ளெரித்துறுவ நின்கணத்தை
யெரிப்பன்விடு மரைக்கணத்தி னடர்ப்பனென வறைகின்றான். எக

தவங்கொடுவா லப்பருவந் தன்னிலயன் றனைவென்று
நவந்தருகா ளைப்பருவ நற்றவரின் மிச்குயர்ந்து
திவம்பயி(லுஞ்) சவனூறு யோசனைபோய்த் தேரொடும்வீழ்ந்
திவர்ந்ததுய ரடைந்திடுமா றெறிந்துதிசைக் கயமெறிந்தும். எசு

மற்றுள்ள திசைத்தேவ(ர் வா)னவரைப் பொருதழித்தும்
பொற்றொடிக்கைச் சசிதன்னைப் புரந்தரன்வேண் டிடக்கொடுத்துஞ்
சிற்றிடையா ளொருபாகத் தேவர்மனை வியர்(ச்காவ)ல்
முற்றுமளித் தரம்பையரை முடுக்குமருஞ் சிறைசெய்தும். எ௫

மலரயனுஞ் சினனேவ மாலுடன்போர் பொருவதனைக்
கலுழனுடன் கே(ட்டளவிற்) பாசத்தாற் கட்டியும்பா
ரொலிதிரைநீர் கரைபுரள வொளிர்வடவை வாய்புதைத்து
மலர்க்கரங்கொ டுயர்கங்கை யடைத்துமுயர்ந் தவரேவர். எசு

சராசரங்க ளனை(த்து)யிருந் தலமூன்றுங் கணப்பொழுதிற்
பராகமெழுப் புவனெவரென் படையினழி யாதவரியார்
முராரிபுகழ் சலந்தரனென் முதன்மையறிந் தனையிலைசொ
லராவணிவாய் (உ)ன்னூல்நின் னருந்தவத்தா லாவதுவென். எஎ

அரவமெலாங் [1] ககபதிகாற் றடையவுடை வதுபோல
வுரனுடையோ ரொளித்ததற்பி னுயர்புயத்திற் றினவகற்ற
வரைபலவாற் றூதிமைய மந்தரமஞ் சனமேருச்
சிரகிரிக ளுடன்றேய்த்துத் தினவொழித்தே னெனமொழிந்தான். எஅ

எனவிவனின் றுரைத்தபொழு திமையவனைப் புகர்முகனைத்
தனைநிகராஞ் சடானனனைத் தாழுநந்தி தனைநோக்கிச்
சினமிகுவே லவுணனையும் பார்த்துநகை சிறிதருளி
மனமொழிமெய்க் கெய்தாத வளர்சோதி யருள்செய்வான். எகு

வேறு

சலந்தர [2] விங்ஙன மொழிந்தன வுள்ளன
சத்திய மெய்த்திறல்கூர்
நலந்தர நிற்கொ டறிந்து மகிழ்ந்தன
ஞுடி லுனக்கெதிரா
வலம்புனை வாரொரு வீரரும் வேறிலை
வந்தனை நந்தியெனு
மிலங்கு கணுதிபர் தம்புவ னத்தினில்
யாவரு மெய்தரிதால் அ0

---

1. ககபதி—கருடன். 2. விஞ்ஞன என்றுளது.

நிகரறு மிப்பத மிப்பொழு துதவுவ
    நீபெறு வாய்பெறின்மால்
மகபதி யயன்முத லிமையவ ரொடுபகை
    மாறிய வாக்குநலந்
திகழ நினைந்துயர் தேவ ரிறப்பது
    தீர்தர மல்கிவருந்
துகளறு யாக மழித்தல் தவிர்ந்தொளிர்
    சுருதியி னெறியடைவாய். அக

உரிய விராசத தாமத குணமே
    யொழித்தருள் கூர்குண நின்
பெரிது படைந்திமை யவரரு மறையவர்
    பேணிய தவமுனிவோர்
திருமறை யவர்கிளை யவமதி யாதொழி
    செருமிகு நீள்படையா
மொரிவுணர் நல்குவ நீகண நாதரோ
    டின்பநு கர்ந்திடுவாய். அஉ

தானவர் தேவர்க டம்மில ரும்பகை
    தானவர் வானவர்வே
ருனதொர் சார்புந மக்கிலை யொப்பர்க
    ளனைவரு மன்புணரு
ஞானம டைந்தவர் நந்தம ரல்லவர்
    நம்பகை யங்கவரா
லேவைய ராலொரு கரும மெமக்கிலை
    யெம்மையு ணர்ந்திலையால். அங

குமரனை நந்தியை நின்னெதி கர்ப்பதொர்
    கொற்றவர் மற்றிலைநந்
தமரின் விளங்குதி யல்லது தாள்கொடு
    சலதியி னிடையுதவு
மமைவரு சுதரிச னப்பெயர் நேமியு
    மருளின நீகொடுபோய்ச்
[1] சிகர்வரைக் குகரத் திடைவிரை வோடு
    சென்றுயி ருய்குதியால். அச

இத்தகை யருளுடை யரனருள் செய்தே(ான்)
    தன்னிடை யடைவுடன்

---

1. இமவரை எனில் எதுகை அமையும்,

மத்தக விழிதரு மனுநிகர் பொறியிலோ
ராதிவ யங்கன்லால்
வித்தக முப்புர மென்னவெ ரித்தனன்
வெம்படை வெந்திடவு
மத்திறல் வஞ்சனை (யோ)னு மஞ்சில
னவமதி யாலறைவான். ௮௫

அடுபடை கொண்டமர் புரிவது வீரமு
மன்றிகல் வெம்படைமேல்
விடுகமு ருக்கிவ னமரினி தாடவி
ருட்பமி குத்துடைவேற்
(கடு)மத கரிமுக னறுமுக னந்திக
ணங்கட வுளருடன்முன்
படுகொலை யமர்பொர வுரனுளதெ னடல்பட
ரமர்புரி குவமாமால். ௮௬

கனல்மதி தக்கன் மக(பதி) மதனெதிர்
கருதல ரெனவெனையும்
நினைவது தவிர்க வுரத்துட னமர்பொர
னிச்சய மெனமொழியா
வனைவரும் வெந்தன ரெனவசை விலைனெறி
யறிவரு டவிரவுணன்
வினைவழி யிறைதரு நேமியெ டுத்துடன்.
வினைபுரி வானினைவான். ௮௭

இதயமு முசனு மலர்ச்சி தயங்குற
வெரிகிளர் வதுவெனவெங்
கதமொடு கைகொடு புயனில வறைந்தெழு
கருதரு வன்மையுடன்
மதமிகு மேவரு மெடுக்கரி தாகிய
வளர்சுட ரொளிவிரிவாற்
சுதரிச னப்பெயர் நேமியெ டுத்துயர்
தோளிடை வைத்தனனால். ௮௮

சக்கர மற்றவன் மற்புய மீதுத
ரித்தன னேவிலையோ
வக்கண னிற்கொலை வச்சிர மைத்திரி
யன்றுபி ளந்தசெனுத்

தக்கத வங்கள் வரங்க ளுரங்கள்
சயங்கள் தணர்ந்தவுணன்
மிக்கவு டற்கமை யிருபிள வாயிரு
வெற்பென வீழ்ந்தனவால். அக

வேறு

நீல மால்வரை யிரண்டென நீண்டபே ருடலங்
கோலு மாரிரு ளிரண்டுருக் கொடுகிடந் தென்னப்
பால நேத்திரன் சக்கரப் படைபிளந் திடலாற்
ருல முய்ந்திடக் கிடந்தன சலந்தர னுடலம். கூ0

விடையு யர்த்தவ னாணையால் வேலைகள் பெருக
வுடலி னின்றெழு சோரியு முற்றவெந் தசையு
மடையொரு தமரர் விரவ வருநர கத்தி
னிடையடைந் ததாலி ரத்த குணப்பெய ரெய்தி. கூக

பொறைநி றைந்தது கவிழ்ந்தது பொறைபடை யாமை
யறமெ ழுந்தது வீழ்ந்(தது) (வெவ்)வினை யறவோர்
குறைக டந்தன மாதவர் குலநெறி மறையோர்
மறைந டந்தன துடந்தன மனுநெறி யொழுக்கம். கூஉ

பரம நாதபொற் (பதப்பணிந்) தனரைக் கழுநீர்ச்
சரம னுகமன் றெரித்தருள சங்கர மழுமான்
கரம னுவணி பூரண காரண வென்று
பிரம னுதியர் நின்னெடும் பேணினர் துதித்(தார்). கூங

[1](வ)குத்த வன்புறும் விண்ண வர்பெற விடையுதவி
முகைத்த முல்லை நேர்முகிழ் நகையொடு மிடபத்தை
யுகைத்து வெள்ளி வெற்படைந் தனனுய(ர் வீரத்தால்)
(நகை)த்து முப்புர மெரித்த நாதவே தாந்தன். கூச

இப்பெ ருங்கதை கேட்பினு மியம்பினு மினிதா
லப்பெ ருந்திற லண்ணனம் மதிபனென் பதனைச்
செப்ப ருங்கத மத(ங்கொ)டு தெளிகிலை யின்னு
மொப்ப ருந்திற லுடையதொன் றுணர்த்துவ னுணர்வாய். கூரு

சலந்தரன் வதைச்சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 311.

1. 'மிகை' என்று குறிக்கப்படுகிறது.

6. சக்கரம் பெற்ற சருக்கம்

அருவமு முருவமு மாகி யங்(கவை)
(யொ)ருவிய பேரொளி யுமைகண் டேத்திட
இருநில நாப்பணின் றினிய நாடகந்
தருமொரு டரனிரு சரணம் போற்றுவாம். க

கலந்தவ ரறிவினிற் கலந்த பேரொளி
சலந்தர னுடல்பிளந் ததன்மை சாற்றினம்
வலந்தரு சக்கர மாயன் பெற்றிடு
நலந்தனை யறிந்தவா நவில லுற்றனம். உ

அனைத்துயிர் களுமிறுங் கால மின்றென
வினைத்திற லவுணரும் விண்ணு ளோர்களு
முனைத்தடல் வலிகொடு மூண்ட வெஞ்சம
ரினைத்தென வொருவரா லியம்பற் பாலதோ. ௩

(கு)ந்தமு முசலமுங் கோடிய வேல்களுஞ்
சந்திர துண்டவெஞ் சரமுந் தானவ
ருந்திட வானவ ருடலம் புண்பட
முந்திய [1] பரவச முயங்க வோடினார். ச

அஞ்சின ரயன்றனோ டடலி ழந்தம
னெஞ்சினர் கணத்திடை நெருங்கி நின்னையே
தஞ்சமென் றிறைஞ்சிடத் தருக்குஞ் செவ்வியு
மெஞ்சினிர் வந்ததெ னியம்பு மின்றெனா. ரு

ஈரெழு புவனமு மினிதிற் காத்தருள்
நாரண மலர்மகள் நாத பைந்துழாய்த்
தாரணி மார்பகத் தருக்குந் தானவர்
போரிடை யழிந்தனம் புகல்க ளொன்றிலேம். சு

தாதையு மன்னையுந் தமரு மாயெமை
யாதரத் தளித்தரு ளரிய மூர்த்தியு
நீதமீய்ந் துயர நீக்கு வாயென
வோதினர் நிலனிடை யுறப்ப ணிந்தனர். எ

அங்கவர் புகறல்கேட் டண்டரஞ் சன்மின்
றிங்களின் கொழுந்தணி சிற்ப ரச்சுடர்ச்

1. பாவ எனல் பொருந்தும்.

சங்கரன் றனையருச் சனைகள் செய்துநும்
பொங்கிய துடரறப் புரிவ னிக்கணம். அ

எனமொழி [1] நீதர விறைஞ்சி வானவர்
தினகரன் மாயன் றிக்கின மிக்கவர்
முனைவர்மா தவர்படை முற்று மேவினு
மனையவர் வரத்தினு லழிகி லாருயிர். கூ

ஆதவன் மண்டிலத் தன்று பெற்றபின்
றீதறு திகிரியுஞ் (சூத)வ னன்புரி
மாதவம் போல்வரு மைந்தன் வெந்திறல்
மேதகு ததீசிமுன் விழுங்க வீய்ந்ததால். ௰

தண்டமுந் திண்டிறற் சார்ங்கமுங் கொண்(டு)
(யீ)ண்டிய வசுரரை யடர்த்தி டாதினி
வண்டுள வத்தினுய் மாற்ற லாருயிர்
கொண்டெமைப் புரிந்திடு குறிப்பு ளாயெனில். ௧௧

வேறு

திரிபுர கால னருளாற்
றிரைகட லூடு (பெ)ய்த
விரிசுட ராழி யொன்று
சலந்தரன் வீர முண்ட
துரியநற் றவங்க ளெய்தி
யொருவரும் பெறுதற் கெய்தா
வரியவ னேமி பெற்று
லெளிதட லவுணர்க் கோறல். ௧௨

வேறொரு படைக ளாலும்
வீய்கில ரவுண ரென்று
கூறிய விமையோர் தங்கள்
குழுத்தனை யினிதி னுெத்தி
யாறணி சடையாற் கன்ப
[2] ராகியாங் கவன்முன் செய்த
மாறெறி யாழி பெற்று
வன்பகை தொலைத்த றிண்ணம். ௧௩

1. = ?   2. தாகியாங் போன்றுள்ளது.

அஞ்சலென் றியம்பி நின்ற
வனைவருங் கூடப் போத
விஞ்சிய விமைய வெற்பின்
வியன்கொடு முடியிற் சென்று
வஞ்சமி லமரத் தச்சன்
வருகவென் றுரைத்த வெல்லை
யெஞ்சுத லொன்று மில்லா
னிறைஞ்சின னெதிர்வந் தெய்த. கச

பூசனை புரிதல் வேண்டும்
பொருவது சிவலிங் கத்து
மாசறு வடிவந் தன்னை
வகுத்திடென் றுரைக்கத் தன்றன்
றேசுறு பணியால் மேருத்
திசமுமந் தரத்தின் பாங்க
ரீசன துருவஞ் செய்தா
னெல்லையில் கலைகள் வல்லான். கரு

கங்கைநீ ராடி வேணி
கட்டி வற்கலை புனைந்து
பொங்கு கண்டிகை யணிந்து
பூதிமீ தெங்கும் போற்பத்
தங்கிய தவவே டத்தைத்
தரித்தருள் பரிந்து முன்ன
ரங்கவ னமைத்த நாத
னருளுருக் கொண்டு போற்றி. கசு

நாடருங் கிரியா சத்தி
ஞானமா சத்தி யான
பீடமோ டிலிங்கஞ் சேர்த்துப்
பிரிவரும் பிரதிட்டை செய்து
நீடரும் பஞ்ச சுத்தி
நெறியினி நடத்தி யார்க்குங்
கூடரு நேச மீசன்
குறித்தரும் வடிவி னேங்க. கஎ

பரிமள கமல நீலோற்
பலமுதல் மலர்கள் வாசம்

பிரிதரு தூப ¹தீ..மெண்
சுவைய மிர்த மாதி
தெரிவருஞ் சைவ நன்னூல்
செப்பிய வுபசா ரங்க
ளுரியமா மந்தி ரங்கொண்
டொருமையிற் கொடுத்துப் பின்னும். ௧௮

பிரணவ நம்முன் பின்னர்
பெற்றிடப் பவன னுதி
வரமுறு சறுவ தத்து
வாவல னீற தாமா
யிரமுயர் மந்தி ரங்கொண்
டெழிறிக ழீரைஞ் ஞூறு
பரவுவெண் கமலப் போது
பரன்றிரு வடியிற் சாத்தி. ௧௯

பொருவரு நன்னு மத்தாற்
போற்றிமுற் பணிந்து நாதன்
றிருவருண் மகிழ்வித் தோதுஞ்
சிவநெறிக் கழ(கி) னூடு
மருமறைக் காவி போலு
மந்தவா யிரநா மத்தா
லொருமைகொ டரிவை பாகத்
தொருவனை யருச்சித் தங்கன் ௨௦

வேறு

தோற்றமுதற் பிரணவந மஞ்சுவாகாந் தமாகவினை
மாற்றியவவ் வாயிரமா மந்திரத்தி னுலுள்ளந்
தேற்றிமிகச் சமித்துமுதற் றிரவியமொவ் வொன்றுநல
வேற்றியவா (குடன்பின்னு) யிரங்கொத்தாங் கின்பமுடன். ௨௧

வருந்தினத்து ளொருதினத்து மஞ்சனஞ்செய் தமுதளவா
யருள்பெருகு பூசைபுரிந் தாயிரமா மந்திரத்தால்
மருவலர்வெண் டா(மரை)யின் மலர்களீரைஞ் நூறு(முடன்)
(றி)ருமுதல்வன் றிருமேனி யூடன்பாற் சாற்றுங்கால். ௨௨

1. தீபமென என்றுளது.

நிலவுதவழ் முடியமல னின்கருத்தி னளவறியான்
மலர்களா யிரத்திலொரு மலர்குறை(ய வ)ருள்செய்தூ
முலைவுதரு மனத்தினனு யுடையான்றன் விழியிட்டோ
வலைவுதருந் தீவினையோ யாவோவென் றகத்தெண்ணி. ௨௩

முட்கமல [1]பவற்றந்தோ ய்) மறந்தனைகொல் முதிர்தவத்தோ
ருட்கமல முட்கறிய மங்குலையா துளமுருகித்
தட்கமலத் தலர்தவளத் தனிக்கமல மெனக்கருதிக்
கட்கமல மிடந்தமலன் காற்கமல மிசைசாத்தி. ௨௪

பொறியொழிந்து வெங்கரணப் போக்கொழித்துந் தீவினையி
னெறியகற்ற மற்றைவிழி நீரருவி பொழிந்திழியக்
குறிகுணமொன் றிலாத கொழுஞ்சுடர்தன் றிருவுருவ
மறிவிடத்துங் கட்புலத்து மழுகதியமர்ந் திடும்வேலை. ௨௫

இளமதியுஞ் சடைமுடியு மெயிற்றொளியும் விழிமூன்றும்
புளகவரை யனையதிருப் புயமெட்டும் புலித்தோலின்
வளமைதிக ழுத்தரிய மணிமார்பு மணிநீறுங்
கிளர்கரியி னதளுடையுங் கிளக்கரிய சழற்றுளும். ௨௬

வரதமுட னருளபைய மாருத பேரருளும்
பரசுகதை மூவிலைநாண் பங்கயங்குந் தங்கரங்கள்
விரவிநலந் தருஞ்சிறப்பும் வெங்கனலின் சுடர்ப்பா லா
லிரவுபகல் கிளர்ந்தொளிரு மெழிலுருவுந் தனிவிளங்க ௨௭

காசினியு மிகநடுங்கக் கமலபவ னுலகுலைய
யோசனைநூ றருளுருவத் தொளிரழற்செஞ் சுடர்சுடர
வா(ச)வனே முதலமரர் மயங்கிக்கெட் டனமந்தோ
வீசனரு ளியாதோவென் றிருந்தனர்பா தலத்தொளிக்க. ௨௮

ஓரிடத்தி லொருகாலத் தொரு(கோ)டி சூரியர்தஞ்
சீருடைச்செங் கதிர்பரப்பிச் சிறந்துதித்தா லெனவொளிகள்
பாரிடத்தும் விசும்பிடத்தும் பரம்பரநற் குண்டத்தின்
பே(ரிடத்)தில் வந்தெழுந்தான் பிறைமுடிப்பிஞ் ஞகமூர்த்தி. ௨௯

அருளுடையா னிமலனென வகர்துணியக் கடவுளர்கள்
வெருவியொளித் தகன்றிடவு(ம் பதமுருக்கொ)ணுடனைய
திருமறுமார் பகநீமுன் சிவபாசங் காவழியா
[2] வொருவவெனப் பணிந்திறைஞ்சி யுமையொருபா கனை(க்கண்டு) ௩௰

1. ?. 2. வொருவவெனைப் எனல் பொருந்தும்.

வஞ்சவினைத் தானவரால் மனமுலைந்துன் கம(லபத)ந்
தஞ்சமென வருமமரர் தனைப்புரப்பாய் தயித்தியர்கள்
துஞ்சலிலா வவர்கடமைத் துஞ்சவருள் புரியென்ன
வஞ்ச(னை)செய் [1]தறைந்தவுரைப் பார்த்துநகைத் தருள்புரிவான். ௩௧

புநடரிலுக் தமகேட்டி பூதலபா தலமகர்வான்
மாவுதுய ரடைந்ததுணர்ந் தனமஞ்சல் மாற்றதுந(ம்)
பொருவரிய சுதரிசன நேமிதரு குவம்புவனம்
வெருவவெழு மடலுருவைப் பாவிப்பாய் வெருவாகொள் ௩௨

பொறையடைந்த வடிவுகொடு (பர)ந்தோன்றிற் புத்தேளிர்
பொறையடைந்து கடுஞ்சமரிற் புறங்கொடுத்துத் துயரடைவர்
பொறையடைந்த வுருவதனாற் றெறும்பயனும் பொறையுனடத்தாற்
பொறையடைந்த படையினாற் புணர்வதொரு பயனுமில்லை. ௩௩

சாந்தமுடை யோனிகளிற் சாராருக் குரம்ளைருஞ்
சாந்தமுடை யோன்றனக்குச் சாந்தமே தனிப்படையுஞ்
சாந்தமருள் தவர்க்குரித்தாற் றுனவர்கு தன்சமரிற்
சாந்தமுனக் குருதொழிந்தார் தராதலங்க ளிடர்நீங்க. ௩௪

போற்றரிய புவனங்கள் புரந்தளிப்போர்க் குயர்கதமு
மாற்றரிய நெறிப்பொறையு மருவிடினின் றடையலர்பாற்
கூற்றநிகர் கொடுங்கோபஞ் செலுத்தமிதுங் கொடியவினை
யாற்றெழுகா தருளுடையப் பொறுக்குமிட முவைகேட்டி. ௩௫

முத்திநெறி யுணர்ந்தவர்கள் மூதுணர்யோ கிகளுயர்ந்த
மித்திரர்கள் தனக்கொவ்வா வமித்திரர்கள் மிகுந்(தமிய)
(ருய்)த்தபய னற்றிட முதுபாவ மனுகுமிட
மித்தகைய வேழிடமும் பொறுக்குமிட மென்றருளி. ௩௬

ஒருபதினா யிரம்பதங்க ளொருகாலத் துதித்தலென
மாவுத(திர்) சக்கரமு மலரணைய விலோசனமுந்
திருவருளி னுற்கொடுத்தான் சித்தாகி யசித்தாகி
யிருவகையுங் கடந்தெவர்க்கு மெய்தாத தனிமுதல்வன். ௩௭

அ(ன்று)முதற் புண்டரிக நடனனென வச்சுதனிற்
கென்றுமொரு பெயரெய்திற் றிமையமக ளொருபாகந்
துன்றுமஞ் சுடர்பின்னும் நினைப்பார்த்துக் (சனியு)மலர்
மன்றலருந் திருக்கரத்தா றைவந்து வரவணைத்து. ௩௮

---

1. ?.

இன்னுமனக் கிசைந்தவர மினிதுகே ளெனவருள
முன்னவனை யடியிறைஞ்சி முதல்வவெனைச் சுரா(சுரர்க)
(ளுன்னி)வழி படுஞ்செயலு மும்பர்துயர் களை(ந்திட லு)
(நி)ன்னிடத்து ம ருத நேயமுமெற் கருளென்ன. ௩௯

தந்தனமென் றவ்வரங்க டான்கொடுத்துன் ற(கத்தைச்
சிந்தைமகிழ்) வுறப்பின்னுஞ் செங்கையாற் றைவந்து
வந்திறைஞ்சுங் கடவுளர்க்கு மருள்சுரந்து மறைந்தனனு
லந்தமிலான் பெருங்கருணை யளவையளவி டற்பாலதோ! ௪0

உடையபிரான் மறைந்ததற்பி னும்பர்முக நோக்கியான்
நடனவில்வோர் புகழ்ந்ததிரு நாமங்க ளாயிரமு
மிடரகலு மாகேட்டோர் கேட்பித்தோ ரியம்பினோர்
படர்கவி ரைஞ்ஞூறு பரிபாகப் பயன்பெறுவர். ௪௧

ஆனதனித் திருநாம மாயிரத்தால் நெய்தயிர்பால்
தேனிவைக ணமு(தா)ன திரவியங்கள் பலகலசத்
தூனமறப் பூரித்தெம் முடையானை விடையானை
வானவர்தம் பெருமானை மஞ்சனஞ்செய் தேத்தினர். ௪௨

நூற்றெரு(ப)த் தடுத்தபரி மகப்பயனுங் காந்துவினை
மாற்றியிமை யவருய்ந்தார் வானவர்கள் வந்திப்பக்
கூற்றையடர்த் தருள்பரமன் குறிச்கரிய வருள்பெறுதல்
(தேற்)றமினி யையமிலை யென்றுநீ செப்புதலும். ௪௩

செப்பியவிம் மொழிகேட்டுத் திசைமுகனு மனமகிழ்வா
லப்படியா குகவென்ன வறைந்திட்டா னவ்(வெல்லை
மெய்ப்படமுன் கொண்டதவ வேடமொழிந் தன்பனமுப
வொப்பரிய வடிவமடைந் தொளிர்வேலை யற்றனையால். ௪௪

பயிலும்வெண் (டிரைதிரு)ப்பாற் கடலூடு பாப்பணைமேற்
றுயில்மயக்க நின்னடைந் ததுசோதி யங்கயிலைச்
சயில(முடை) நாயகன்தா மதகணத்தி லோரற்ப
மயில்கொணே மியாயடுத்த லடலென்றினி தறியா(யால்). ௪௫

வேறு

(நீயு) மாமலர்ப் பொகுட்டுறை நீடுறு மறைநூ
லாயு நான்முகத் தொருவனு மாரு மொன்றிற்
றேய்வி லாமுத லிலிங்கமாய்த் தோன்றுத லிதென்
றேயு மாறறிந் தியம்பு(தற்) கெய்தின ரிலையால். ௪௬

வேத சாத்திர மளவினால் விளங்கிய வுண்மைப்
போத மாதவர் நாரணற் கப்புறம் பொலிபுந்
தீதி லாப்பதம் [1]பார்ப்பரென் றருமறை (திரு)நூ
லோது மாறறிந் துணர்ந்திலை யுணர்விழந் துழல்வாய். சஎ

அடர்ந்த செந்தழல் வடிவெடுத் தண்டமண் டங்கள்
கடந்து நாயக னின்றி(க்) கமலனு நீயும்
படர்ந்த வன்ன மாய் பன்றியாய் வான்புவி படர்ந்து
மிடந்துங் கண்டிலீர் மௌலியோ டிருபத மின்னும். சஅ

(பொன்று) மூழியில் நின்னையும் புணரி தனையும்
நின்ற தேவர்க ளியாவையு நிறையுயி ரனைத்து
மொன்று மப்பிர கிருதியி லொடுக்குவித் துலவா
தன்று (மொன்று நின்)றவ னழிவிலா முதல்வன். சகூ

பருதி மாமதி யிந்திரன் பாவகன் கால
னிருதி சாகரத் தலைவன் கால்நிதி பதியீச
னிருது நாள்மதி முதலிமை ய(வருக் கிலங்கு)ஞ்
சுருதி யாவையுந் தருபவன் தோகை(யோர்) பா(கன்). ரு0

கற்பகா லங்கள் கடந்துவெங் கண்ணுத லருளோ
ரற்ப முண்டெனில் நீயுமந் தகற்கிய மனுவாய்
வெ(ற்பு நற்)சிலை கொண்டுமுன் றிரிபுரம் (வீழ்)த்த
வற்புதத் தனிச்சேவகத் தவனையா ரொப்பார். ருக

தனது பேரரு ளாணையே சராசர நடாத்தி
யினது செய்கையென் றுலகினு(க் கு)ணர்தி தந்த
வனக ணுதியொன் றற்றவ னந்தமு மில்லான்
முனைவ னற்றொழில் நீயயன் முயறற் கெளிதோ!. ருஉ

இத்தி றத்தினால் நின்னைநீ மதித்திலை பிரி(தாய்)
முத்தி நாயக னருள்வழி மூவுல குய்ய
மத்த மிற்றிட நிற்கொடு நின்னைநீ மாய்த்த
லுத்த மத்தியல பரமுட னுயிரொழித் திலையால். ருங

புரத்தை நீறெழ ந(ட)த்துவான் புவிபுரந் தருளு
மரத்த மேனியா னதிபய முதவிய கோப
மரத்தின் பேலிடி வச்சிரம் பாய்ந்தது மான
வுரத்தி னுலுடல் சிதைப்பநீ சிதைவதோ வுண்மை. ருச

1, பார்ப்பரென் என்றுளது.

என்று மானிட மடங்கலுக் கிவையிவை யெடுத்துத்
துன்று சீற்றமோ டுரைத்தனம் சொற்றன மிப்பால்
வென்றிவீ ரன்மேல் விண்ணவர் வெருவுற வரியைக்
கொன்று தோல்முகங் கொண்டமை கூறலுற் றனமால். ௭௫

வேறு

செறுநர் மடங்கற் றிருநெடு மார்புத்
தெண்ணிலாப் பிறையணி வீர
ரறிவுறுத் தியவச் செய்கையு மிக்க
தறைந்தன மறைந்ததர்க் கப்பாற்
குறிகுணங் கடந்த வொருமுதல் சரபக்
கோலமாய் மால்வடி வான
முறுகிய சினத்து நரகரி தன்னை
முடித்தவா மொழியலுற் றனமால். ௭௬

சக்கரம் பெற்ற சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம். 367.

7. நரசிங்க வதைச் சருக்கம்

இதுவுந் தன்மை யன்றியும் பசுநீ
யின்றல வென்றுமெம் மீசன்
பதியென வுணர்வா யென்றனன் வேழ்வி
பாழ்படப் பருதிபல் லு(கு)த்து
மதிமயங் கத்தேய்த் தனற்கரமு மாய்த்து
வச்சி ரன்புய முரித்து
விதிதலை யறுத்து வாகையன் றணிந்த
விண்ணவன் வீரபத் திரனே! ௧

இத்தகை யறைய மொழிநர மடங்க
லெரிதழல் கொளுவிய கூர்வேல்
வைத்தமை நிகர்ப்பச் செவித்துணைப் புகலும்
வாசகை புரிந்து மாலி (யை)
(கை)த்தர நடப்ப தெனவெதிர் நடந்து
கொதித்தெழு முகிலென வெதிரா
வுத்தம வீரவி புதனைப் பிடிப்பா
னுடற்றுவா னுளத்தினுள் ளுதலும் ௨

(உளமி)டைக் கருது நினைவுறு முன்ன
[1] ரு(ல)கெலா மதிபய மடையக்
கிளரொளி யிரவி மதியிர சதப்பொன்
றடித்தெனக் கிளர்க்கரி தாகி
யளவிட வரிதா யண்டகோ ளகையு
ளெ(ண்டி)சா முகங்களு மடங்க
வளர்சுடர் விரியு மொருசுட ரெல்லாச்
சுடரையு மறைத்தெழுந் ததுவால். ௩

கருதல ரிறுதி பெறவொரு வருக்குங்
கருதிட வணுகிட வரிதா
(மிரு)வரு முலைய வொருசுடர் பின்னு
மெழுவது போல்நம் பரன்ற
னருளுரு வான விரிசுட ரகண்ட
மளித்திடு மாதிவீ ரன்றன்
றிருவுரு வாகிப் பொலிவது கண்ணுற்
(றி)னைத்தன ரளிப்பிலா விமையோர். ௪

இருளிடை யனலின் விரவிய கிரண
மிரவிரி யுதையகா லையினிற்
பருதியை யடைவ தெனநர மடங்கற்
பாலுறை யாதிநா யகன்றன்
கருதரு பரம வொளிகிளர் துண்டங்
கனல்விழி வழிபுறப் பட்டு
மருவரு திறல்கூர் வீரபத் திரர்தம்
வடிவிடை வந்தடைந் ததுவால். ௫

மடலவிழ் கமல பவன்முத லடைந்த
வானவ ரேனையர் வாழக்
கடல்விட மருந்தி யளித்தரு ளிறைவன்
காரண காரியா தீத
னடமிடு நிமலன் பா(ரக) முதல்வன்
நாடருந் திருவரு ளுருவச்
சுடரொரு வடிவாய் வீரனிவ் வுலகிற்
றுகடவி ரற்புதந் திகழ. ௬

---

1 = ருகெலா என்றுளது.

சடையணி முடியு மிளமதிக் கொழுந்து
(ம)ழல்விழி மூன்றும்வா ளெயிருந்
தொடரயிற் பரவைத் துண்டமுங் காள
கண்டமுந் தோள்களா யிரமும்
படர்சிறைப் பாம்பும் நாபியுங் கீழுற்
படிவமும் வாலுநாற் றாளுந்
திடமுறு புறத்துப் பதமொரு நான்குஞ்
சேணிடைப் பொலிந்துமுன் றிகழ. ௭

எயிறுகொண் டதர மதுக்கியார் வங்க
ளெழவுயிர்ப் போங்கழுங் கா(ரப்)
(புய)லொலி யுலைய மிகவன லொளிகள்
புக்கொளித் திடவொளி பொங்கச்
செயிரறு மருவா மீசனுக் குரிய
திருவுரு வருணமா யுதங்கள்
பயிறரப் பயிலா வேற்றுமை திகழப்
பரவருஞ் சரபமா யினால். ௮

திண்டிறற் சரப முழக்கினுக் கிறுதித்
திரண்முகிற் சிறுபறை முழக்கங்
கொண்டவான் சிறகர்க் காலினுக் கன்னாட்
கொடியமா ருதங்குளிர் தென்றல்
மண்டுநேத் திரங்கள் சொரிதழற்குக் காந்த
வடவையோர் சிறுபொ(றி வ)டிவத்
தெண்டர வெரிய பேரொளிக் கஞ்ஞான்
றிரவிகள் மின்மினி யேய்க்கும். ௯

பலகலை மதிய மளவில வுளவோ
பரன்றிரு வெயிற்றெளி பரவ(க்)
(கு)லவட கிரிகள் கரையில வுளவோ
கொற்றவெம் புயங்களைக் கூற
வலகிப் புவன நிலைபெற வெடுத்த
வனலொளித் திருவுருப் பெருமைக்
குலவரு மு(ண்மை வு)ரைக்குமா றெளிதோ
வுரைக்கலாம் பின்னுமவ் வுருபே. ௰

கொண்டபே ருருவச் செய்கையி தம்ம
குறிக்கரு மண்டகோ ளகையும்

முதலானவர்கள் கருடனைக்கண்ட சர்ப்பம்போல் என்னைக்கண்டு தலையைக் கீழே போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பவும் பத்தேகான் முதலியோர் என்னோடு யுத்தத்திற்கு வந்திருக்கிறார். இந்தப் பல்லாள் சிரோபல் என்கிற துருக்கத்தை வாங்கிக்கொண்டுதான் வெகு சமர்த்தனென்றெண்ணிக்கொண்டு இருக்கிறான். ஆகையினால் நீங்கள் விரைவில் போய் அந்தப் பல்லாளனை அடித்து அந்த துருக்கத்தை வாங்கிக் கொள்ளுங்கள். நானும் இந்த பத்தேகானை அடிக்கிறேன் என்று காவுகன் என்கிற சர்தாருக்கு பெரியதனம் கொடுத்து அவரோடு கோந்து, பீமன், சிவா, ஆபீககன் ஆகிய சர்தார்களை நேமித்து சேனையோடுகூட அனுப்பினார்.

அந்தக் காவுகனும் சேனையோடு புரந்தற்கெடி விட்டுப் புறப்பட்டு சிரோபலன் நகரத்துக்குச் சமீபமாய் போகும்போது அங்கிருக்கும் பல்லாளன் சிவாஜி ராஜாவினுடைய சேனை வந்தது என்று தன்னிடமுள்ள சர்தார்களை அழைத்துச் சொன்னது யாதெனில் நீங்கள் பயப்படாதீர்கள். சண்டையிலே சாவதல்லாது ஓடிப்போவது பெரிதல்ல. நாமும் பத்தேசானுடைய உத்தாரத்து மேல்தான் இந்த சிரோபலத்தை வாங்கினோம். இந்தத் துருக்கத்துக்கு வெளியில் இருந்துகொண்டு சண்டை கொடுத்தால் மோசம் வரும். கோட்டைக்கு உள்ளே இருந்து [1] ஆசரு பிடித்துக்கொண்டு சண்டை கொடுக்கவேண்டுமென்று எல்லோரும் ஆசரு பிடித்தார். அப்போது சிவாஜி ராஜாவினுடைய சேனாபதி என்கிற காவுகனென்கிறவன் தன்னுடைய சேனையைப் பார்த்து இந்த பல்லாளன் கோட்டை ஆசரு பிடித்தான். இந்தக்கோட்டைக்கு கொத்தளங்கள் இல்லை. சுற்றிலும் அகழியுமில்லை. இது வாங்குதற்கு பிரயாசமல்ல. ஆகையினால் நீங்கள் இந்தக் கோட்டையை சுற்றிக்கொண்டு உள்ளேயிருந்து ஒருவரையும் வெளியேவிடாமற் வெளியேயிருந்து ஒருவரையும் உள்ளே விடாமல் பந்தோபஸ்து பண்ணிக்கொண்டு கடப்பாரை, குந்தாளி, மண்வெட்டியினாலே சுவரை இடித்து மேலே ஏறுங்கள் என்று சொல்லி அப்படி எல்லோருங்கூடிக்கொண்டு கோட்டை அருகில் நெருங்கும்போது கோட்டைக்கு உள்ளே இருப்பவர்கள் சக்கரங்களினாலே அம்புகளினாலே உரல் உலக்கைகள் எந்திரங்கள் கடப்பாரைகள் குறக்கொள்ளிகள் கொதிக்கக் காய்ச்சின எண்ணெய்கள் இவற்றினாலே அடிக்கத் தலைப்பட்டார்கள். இவர்களும் சாகசம் பண்ணி ஆயுதங்கள் எடுத்துக்கொண்டு சுவரிடித்து ஏணியை வைத்து மேலே ஏறினார். அந்தக் காவுகனும் கோட்டைவாசல் கதவை பிளந்து உள்ளே புகுந்து கைகலந்து ஒருவருக்கொருவர் அடிக்கும்போது பல்லாளனுடைய சேனை பின்வாங்கி ஓடத்தலைப்பட்டது.

அது பார்த்து பல்லாளன் கத்தி யெடுத்துக்கொண்டு காவுகனை அடிக்க வந்தான். காவுகன் குந்தாயுதத்தினாலே பல்லாளனை அடித்துக்கீழே தள்ளினான்.

1. ஆசருவாசல்-தலைவாசல்.

அவனும் வீரசொர்க்கத்தை அடைந்தான். அவனுடைய சேனை சிறிது ஓடிப் போயிற்று. சிறிதுபேர் யுத்தம் பண்ணி வீர சொர்க்கத்தை அடைந்தார். அப்போது இரத்த மாமிசங்களால் பூமி நிறைந்துபோயிற்று. கைபோனவன் கால் போனவன் தலை போனவன் அந்த ரணகளத்திலே புரளத் தலைப்பட்டார்கள். இப்படி சண்டை பண்ணி அந்த துருக்கத்தை கைவசம் பண்ணிக்கொண்டு அவர்களுடைய யானை குதிரை வஸ்திராபரணங்கள் திரவியங்களெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு ஜெயத்தை அடைந்து முத்தாரங்கள் ரெத்தின ஆரங்கள் [1] சரப்பளிகள் கழுத்திலே போட்டுக்கொண்டு சன்னுகைத்துடனே அங்கேயிருந்து புறப்பட்டு புரந்தறகெடிக்கு வந்து சிவாஜி ராஜாவுக்கு முசிரா பண்ணினார்கள்.

பதினான்காம் அத்தியாயம்

இப்படியிருக்கும் போது அந்த பத்தேகான் அயபத்து கானனுடைய பிள்ளை சண்டையிலே விழுந்தானென்று சேதி கேட்டு சிவாஜி பேரிலே வெகு கோபம் பண்ணி வெகு கர்வத்துடனே முசேகான் மத்தசிது இன்னும் சிறிது சர்தார் கூட்டங்களுடனே வெகு வேகமாய் புரந்தறகெடி சமீபத்திலே வந்து பாளையத் தோடு இறங்கினான். அதை சிவாஜிராஜா பார்த்து பர்வதத்தினுடைய சிகரத்து மேலே நகாரு அடித்த சப்தத்தினாலே சத்துருக்களுடைய சேனைக்கு பயமுண்டா யிற்று. அதற்குமேல் பததேகான் முசேகான் முதலான சூரர்களை புரந்தறகெடி மேல் ஏறச்சொல்லி தான் பின்னே நின்றுகொண்டு பலாஜத்தான் என்கிறவனையும் காட்டிக்கே என்கிறவனையும் பக்கங்களிலே வரச்சொல்லி ஏறிப்போகும் போது துருக்கத்து மேலிருந்து பீரங்கிகளினாலேயும் துப்பாக்கிகளினாலேயும் அடித்தான். அம்புகளினாலேயும் பல ஆயுதங்களினாலேயும் அடித்தார்கள். அதனால சத்துரு சேனைகள் வெகுவாய் அடிபட்டு சிறிதுபேர் ஓடிப்போனார்கள். சிறிதுபேர் மடிந்து போனார்கள். கைபோனவன் கால்போனவன் போவதற்கு சக்தியில்லாமல் அங்கேயே கிடந்தார்கள். இவற்றை யெல்லாம் முசேகான் பார்த்து தன்னுடைய ஜனங்களிடம் சொன்னதாவது:

இந்தப் புரந்தறகெடிமேல் இருக்கிறவருடைய சாமர்த்தியம் வெகு அதிக மாயிருக்கிறது. ஆகையால் நம்மை அடிப்பார்கள். வெகு உஷாராய்ப் போக வேண்டுமென்று ஏறுகிறபோது முசேகான், மீனாதுகான், ரெத்தினகான் இவர் களோடு பயிரவன், காட்டிக்கே, வாகே இவர்கள் பாணங்களினாலேயும் கத்தி களினாலேயும் யுத்தம் பண்ணினர். அப்போது கோந்து என்கிறவன் பாலாக்களியி னாலே முசேகானுடைய மார்பில் குத்தினான். அவன் அந்த பாலாவை பிடித்துக் கொண்டு ஒடித்துவிட்டான். சற்பசாவோடு தீர்சத என்கிறவன் வந்து யுத்தம் செய்து இரண்டுபேருக்கும் இரத்தப்பிரவாகமாயிற்று. வியாக்கிரனென்கிறவன்

1 சரப்பளி—ஓராபரணம்.

காட்டிக்கே என்கிறவனை புஜத்துமேல் அடித்தான். அவனும் இவனை புஜத்திலே அடித்தான். மீனுந்துகான், ரெத்தினகான் இருவரும் பயிரவனை பாணங்களினலே அடித்தார்கள். அவனும் இவர்கள் இருவரையும் பாணத்தினலே அடித்து ஜெயத்தை அடைந்தான்.

அப்போது அந்த புரந்தர் கெடிமேல் இரத்தநதி ஓடிற்று. அந்த வேளை விமானத்திலே தேவதைகள் ஏறிக்கொண்டு சண்டை வேடிக்கை பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். அந்த கோந்து என்கிறவன் கையிலே பட்டாக்கத்தியை வாங்கிக்கொண்டு பாட்டாணிகள் நூறுபேரை இரண்டு துண்டுகளாய் வெட்டிப் போட்டான். அந்தப் பராக்கிரமத்தை முஸேகான் பார்த்து கத்தி எடுத்துக் கொண்டுபோய் கோந்து என்கிறவனை அடிக்கப்போனன். இதற்குள்ளே அந்த முஸேகானை இரண்டு துண்டாய வெட்டிப்போட்டான், அதன்பிறகு சற்பசா என்கிறவனுடைய வில்லை சத என்கிறவன் பிடுங்கி ஒடித்துப்போட்டான். பின் சற்பசா என்கிறவன் பரிகாயுதத்தை எடுத்தான். அதையும் சத என்கிறவன் வெட்டிப்போட்டான். அதனல் அந்த சற்பசா என்கிறவன் ஆயுதமில்லாமல் நிராயுதனய் விலகிப்போனன். அதன்பிறகு சத்துருவினுடைய சேனை பின் வாங்கிற்று. அதனல் சிவாஜி ராஜா வெகு சந்தோஷப்பட்டு இனிமேல் விசைய புத்து எதிலிசாவை ஜெயிக்கவேண்டுமென்று சொல்லி ஆயத்தப்பட்டான். பத்தேகான் அபஜெயப்பட்டு விசையநகரம் போய்ச்சேர்ந்தான்.

பதினைந்தாம் அத்தியாயம்

அந்த எதிலிசா என்கிற மகமதுகான் கேட்டு புரந்தர் கெடிமேலே போன முஸேகானும் நாசத்தையடைந்தான். பத்தேகானும் அபஜெயப்பட்டு வந்தான் என்று ராத்திரி பகல் விசனத்தோடுகூடி நாம் மிகவும் காப்பாற்றின துலுக்க சர்தார்கள் எல்லாம் மடிந்துபோனர்கள். இது என்ன ஆச்சரியம் என்று ஷாஜி ராஜா நமமுடைய ஆசருவினலே வெகு பாக்கியத்தையடைந்து கர்வத்தை உடைத்தானவனய் நம்முடைய ஆக்ஞை எண்ணமல் ஷாஜிராஜா முன்னே பண்டரபுரத்துக்கிட்டே யுத்தம் பண்ணி என்னுடைய ரெணதுல்லாகானை ஜெயித்தான். பின்னும் டயமில்லாமல் அரக்கஊேசுரன் என்கிறவனை அடித்தான். கர்நாடகதேசத்து ராஜாக்களெல்லோரும் நம்முடைய ஆக்ஞை எண்ணமல் அவரோடு கூடினர்கள். நாம் எந்தவேளையிலே அழைத்தாலும் வராது போய் விட்டார்கள். இந்த ஷாஜிராஜா நம்முடைய தகப்பனர் இப்ராமுசாவுக்கு மிகவும் உபகாரம் பண்ணினபடியினலே அவரும் இவர்மேல் சந்தோஷப்பட்டு வெகு பெரியதனம் கொடுத்தார். ஆகையினலே இவருடைய நூறு அபராதங்கள் பண்ணினலும் நான் சகித்தேன். அதன் பிறகும் சகிக்கப்படாமலிருக்கப்பட்ட அபராதங்கள் பண்ணினபடியினலே அந்த ஷாஜிராஜாவை நிக்கிரகம் பண்ணவேண்டி முஸ்த்துபாகானனை அனுப்பிவைத்து அவரை கைப்பிடியாய்

பிடித்துக்கொண்டு வந்தபடியினுலே அவருடைய பிள்ளை செம்போராஜா சிவாஜி ராஜா இவர்கள் இரண்டுபேரும் நம்மை ஜெயிக்கவேண்டுமென்று பல யுத்தம் பண்ணினர்கள்.

இந்த ஷாஜிராஜாவினுடைய நிமித்தியம் செம்போராஜா நம்முடைய பருது கானனை ஜெயித்தான். சிவாஜிராஜாவும் ரண களத்திலே பத்தேகானனிடம் துரத்தினன். இது என்ன ஆச்சரியம்! சிவாஜி ராஜாவினுடைய கையிலே சிம்மக்கெடி, புரந்தர் கெடி இவையிரண்டுமிருக்கிற படியினுலே அவனுக்கு கர்வமில்லாமல் எப்படியிருப்பான். ஆனல் அந்தப் புரந்தர் செடி வாங்குவது அசாத்தியம், பெங்களூரிலே செம்போராஜாவை வைத்ததும் புரந்தர் செடியிலே சிவாஜி ராஜாவை வைத்ததும் பார்த்தால் நம்மை ஜெயிக்கவேண்டுமென்று வைத்தாற்போல் தோன்றுகிறது. இந்த ஷாஜிராஜாவுக்கு நிர்பந்தம் பண்ணியிருக்கிருமே இவரை விட்டுவிட்டால் எப்படியோ விடாமலிருந்தால் எப்படியோ என்று மனதிலே நாலுபிரகாரம் யோசனை பண்ணி, நல்லது; விட்டு விட்டால் இந்த உபகாரம் மனதிலே வைத்து அனுகூலமாயிருப்பானென்று நிச்சயம் பண்ணி தன்னிடமுள்ள புத்திமானயிருக்கப்பட்ட மந்திரியிடம் சொன்னன். அவனும் யுக்தமாயிருக்கிறதென்று சொன்னன்.

அதன்பிறகு அந்த ஷாஜிராஜாவை அழைத்து மங்களஸ்நானங்கள் பண்ணிவைத்து நல்ல வஸ்திரபூஷண ஆபரணங்களும் கொடுத்து ஷாஜிராஜாவை சதிரிலே அழைத்துக்கொண்டுவந்து உயரமாயிருக்கப்பட்ட ஆசனத்திலே உட்காரவைத்து வெகு உபசாரத்துடனே எதிலிசா என்னும் மசமதுகான் சொன்னது நீர் மிகவும் தெரிந்தவர். இந்தப் பிரபஞ்சத்தினுடைய சேதிகள் எல்லாம் உமக்குத்தெரியுமே. நாம் முஸ்தபாகானனை உம்மிடம் அனுப்பியது திரேஷத்தினுலே அனுப்பினதல்ல. அப்படியிருந்தாலும் அது எண்ணுமல் பொறுக்கவேண்டும். அது என்னவென்ருல் உம்முடைய பேட்டிக்காக பண்ணின காரியமேயல்லாமல் வேறில்லை. இப்போது நீர் நிர்பந்தத்திலேயிருந்து விடுபட்டீர். பெரிய குலத்திலே பிறந்தவர். ஆனபடியினுலே நமக்கு இதமாயிருக்கப்பட்ட காரியத்திலேயிருக்க வேண்டும். பெரியவராயிருக்கப்பட்ட ஒருவர் பதினயிரம் அபராதம் பண்ணினுலும் அவனுலே கொஞ்சம் உபகாரமிருந்தாலும் அதுவே பெரிதாய் பண்ணிக்கொண்டு சகிக்கிருர் என்று இப்படிப்பட்ட வார்த்தையினுலே உபசாரம் சொல்லி ஓ! ஷாஜிராஜாவே! உம்முடைய இளைய பிள்ளைக்கு புத்தி சொல்லி நம்முடைய சிம்மக்கெடியை விட்டுவிடச் சொல்லவேண்டும். அதன் மேல் நமக்கு வெகு ஆசையாயிருக்கிறது. பெங்களூர் நம் நமக்கு நேசா பண்ண வேண்டுமென்று மிகவும் உபசாரத்தோடு சொன்னன்.

இனிமேல் ரொம்ப சொல்லவேண்டியதென்னவென்ருல் நீரும் நாமும் ஒன்று. உம்மைத்தவிர நமக்கு யாரிருக்கிருர். நம்மைத்தவிர உமக்கு யாரிருக்கிருர்,

ஆகையினால் இந்தகாரியம் [1] அகத்தியமாய் பண்ணவேண்டியதென்று எதிலிசா ஷாஜிராஜாவுக்கு வெகு உபசாரமாய் சொன்னதைக் கேட்டு சிரித்துக்கொண்டு அவனுடைய மனதுபடி [2] பிரதிஉத்தரம் சொல்லி சந்தோஷம் பண்ணிவைத்தார். அதன்பிறகு எதிலிசா யானைகள் குதிரைகள் கொடுத்தனுப்பினார்.

அது எப்படியிருந்ததென்றால் மேகங்களினாலே மறைந்திருக்கப்பட்ட சந்திரன் வெளிப்பட்டு அந்தப் பிரகாசத்தினாலே எப்படி ஜனங்கள் சந்தோஷப் படுகிறார்களோ அப்படி மிலேச்சருடைய கையிலே அகப்பட்டிருந்த ஷாஜி ராஜா விடுபட்டு ஜெகத்துக்கெல்லாம் ஆனந்தம் அடையப்பண்ணி வைத்துக்கொண்டு தன்னுடைய ராஜ்யத்துக்கு வந்துசேர்ந்தார். அதன்பிறகு ஷாஜிராஜாவினுடைய ஆக்ஞானுசாரமாய் சம்பாஜிராஜா எதில்ஷாவுக்கு வெகு திரவியங்களும் சேனைகளும் கொடுத்து தன்னுடைய சத்துருக்களை ஜெயிக்கவேண்டி உத்தரம் பண்ணினார்.

பதினாறும் அத்தியாயம்

இப்படியிருக்கும் போது சிவாஜிராஜா சொர்ணசர்மா என்கிறவனை அழைத்துச் சொன்னது, யாதெனில் தகப்பனாரால் சிம்மக்கெடியை விட்டு விட்டேன். புத்தி வந்தனாயிருக்கப்பட்ட ஷாஜி ராஜா என்னுடைய சொரூபத்தை அறியாமல் இருக்கிறார். புத்திவானாயிருக்கப்பட்ட ஜனங்கள் என்னை சிலாகித்து சாமர்த்தியவானென்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அஞ்ஞானியாயிருக்கப்பட்டவன் என்னை யறியாமல் போனால் அதனாலே எனக்கு துக்கமில்லை. இவர் மகா புத்திசாலியாயிருந்துகொண்டு என்னுடைய சொரூபம் அறியாமல் போனபடியினாலே எனக்கு வெகு விசனமாயிருக்கிறது. என்னுடைய சொரூபத்தை அறிந்திருந்தால் அந்த சிம்மக்கெடியை விடச்சொல்லி சொல்ல மாட்டார். என் கையிலே அகப்பட்ட சிம்மக்கெடியை வாங்குவதற்கு யாராலே ஆகும். இப்படியிருக்கும்போது சத்ருவாயிருக்கப்பட்டவன் மேலே விசுவாசத்தை எண்ணியிருக்கிறார். கையாலே ஆகாதவன் சத்துருவாயிருந்தாலும் அவனை [3] உபேட்சை பண்ணக்கூடாது. அது எப்படியென்றால் தத்துக்கிளி சின்னதா யிருந்தாலும் விளக்கிலே விழுந்து எப்படி விளக்கை அணைக்கிறதோ அது போன்றும், சிறிதாயிருக்கப்பட்ட எறும்பு யானை துதிக்கைக்குள்ளே புகுந்தால் எப்படி யானை நாசத்தை அடைகிறதோ என்று அப்படி எண்ணாமலிருக்கிறதே இது ஒரு ஆச்சரியமல்லவோ! நல்லது ஆகட்டும். இந்த ஷாஜி ராஜாவைப் பிடித்துக்கொண்டு போய் பத்தேகானவிலே போட்டதற்கு அப்படிப்பட்ட சத்ருவை பதில் கிரியை பண்ணுகிறேன். இன்றைய முதற்கொண்டு நம்மைத் தொட்டு இந்த மிலேச்சர்களுக்கு நாசம் வந்ததென்று ஜெகத்திலே கீர்த்தி

1. அகத்தியம் – அவசியம். 2. பிரதிஉத்தரம் – மறுமொழி.
3. உபேட்சை – அசட்டை

உண்டாகப்போகிறது. யார்யாருக்கு எப்படிப்பட்ட மிலேச்சர்களுண்டோ அவர்களை எல்லாம் என்னுடைய பாணத்தினாலே நாசம் பண்ணுகிறேன். இந்த விசைய நகரம் வாங்கவேண்டுமென்று என்னுடைய மனதிலேயிருக்கிறது. ஆகையினால் சேனை எல்லாம் தயார்பண்ணச்சொல்லி சொன்னார்.

இந்தப் பேச்சுகேட்டு அந்த சொர்ணசர்மா சொன்னது என்னவென்றால் கேளும் ராஜாவே! பலவந்தனோடே [1]வயிரம் பண்ணலாகாது. அப்படி வயிரம் வந்தபடியினாலே பலவந்தனாயிருக்கப்பட்ட சத்துருக்கு திரவியங்கள் கொடுத்து சுவாதீனம் பண்ணிக்கொள்ளவேண்டும். சரிசமானமாயிருக்கப்பட்ட சத்துருக்கு நல்ல வசனம் சொல்லி சுவாதீனம் பண்ணிக்கொள்ளவேண்டும். துற்பலனாயிருக்கப்பட்ட சத்துருவை சிட்சைபண்ணி சுவாதீனம் பண்ணிக்கொள்ள வேண்டும். [2]பிதுபா பண்ணுவது எல்லோருக்கும் சரிதான். இதல்லாமல் ஸ்திரீ விசனத்தினாலே சரீரப்பலன் போகும். மத்திய விசனத்தினாலே சித்தத்துச்கு மோகம் வரும். சூது விசனத்தினாலே தனநாசம் வரும். லோபியாயிருக்கப்பட்டவனுக்கு காரியம் கூடிவரமாட்டாது. நிஷ்டுரமாயிருக்கப்பட்ட வார்த்தையினாலே தரித்திரம் வரும். வேட்டையாடுவதாலே பாபம் வரும். சிட்சை பண்ணுவதாலே அபகீர்த்தி வரும். இந்த ஏழு விசனங்களும் ராஜாக்களுக்கு இருக்கலாகாது.

இதிலே ஒன்று இருந்தாலும் புத்தியைக் கெடுக்கும். இதுவல்லாமல் நீதிசாஸ்திரம் பார்க்கவேண்டும். பாராமல்போனால் லெட்சுமி நிற்கமாட்டாள். எப்போதும் விசனத்தோடு கூடியிருந்தால் சேவிக்கிறபேருக்கு திருடுவதற்கு இடமுண்டாகும். சிறிதுபேர் ராஜாவை விட்டுப்போய்விடுவார்கள். சிறிதுபேர் பரவை பண்ணாமல் இருப்பார். சிறிதுபேர் சத்துருவோடு போய்ச் சேருவார். ஆகையினால் ராஜாக்கள் விசனத்தை விட்டுவிடவேண்டும். விசனத்தோடு எவனொருவன் இருக்கிறானோ அவன் யுத்தத்திலே சத்துருவினாலே ஜெயிக்கப் படுவன். நீர் ஷாஜி ராஜாவைத் தொட்டு சிம்மக்கெடியை சத்துருவுக்குக் கொடுத்தீர். பெங்களூரும் கொடுத்தீர். அதனால் சத்துருவுக்கு என்ன யோக்கிதாம்சம் உண்டாயிற்று. இது இரண்டும் எங்கே போயிற்று. நம்முடையது நமக்கு வரவே வரும். இப்போது இந்த விஜயநகரம் வாங்கவேண்டுமென்று எத்தனம் பண்ணுகிற உமக்கு இந்த பூமண்டலம் எட்டுதிக்கும் உமக்கு கைவசமாயிற்றென்று எண்ணிக்கொள்ளும்.

இராஜா மந்திரி ஆப்தமாயிருக்கப்பட்ட ஜனங்கள் திரவியம் ராஜ்யம் துருக்கங்கள் சேனை இது ஏழும் ராஜாங்கம் என்று அறிந்துகொள்ளும். இவற்றில் ஒன்று குறைந்தாலும் சத்துருக்களுக்கு பரிகாசம் பண்ணுவதற்கு இடமாம். இந்த

---

1. வயிரம் – சினம், பகை. 2. பிதுபா – எதிரிகளுக்கிடையே பகையை உண்டாக்குதல்.

ஏழுக்குள்ளே ராஜா வென்கிறது [1] மஸ்தகம், மந்திரி என்கிறது முகம், திரவியம் சேனை இது இரண்டும் இரண்டுகை, குறையுடபபெல்லாம் ராஜ்யம். ஆப்த்த ஜனங்கள் குழச்சு [2] சந்துகள், துருக்கங்கள் எலும்பு இப்படி ராஜாங்கம் ஏழு என்று அறிந்துகொள்ளும். இந்த ஏழு அங்கத்தோடு இருக்கப்பட்ட ராஜாவுக்கு ஆத்மா வந்து தர்மம், ஆலோசனையே பிராணன், நீதி என்பது பலன்(ம்) நீதியில்லாமல் இருப்பவன் அசாமர்த்தியன், சாமர்த்திய மில்லாதவன். நியாயத்தோடு தண்டனை பண்ணுவதே சௌரியம்; அதர்மமே சத்ரு. பரஸ்பரமாய் பேதம் பண்ணுவதே மதம். பேதம் பண்ணுால் அபேதமாயிருக்கப்பட்டதே தீர்க்காயுசு. ஜனங்களுக்கு சந்தோஷம் பண்ணிவைப்பதே பெரிய தனம். முன்யோசனை பண்ணுவதே பார்க்கிறது. காந்தியாயிருக்கப்பட்ட ரூபமே பிரதாபம், நிர்மலமாய் இருக்கப்பட்ட புத்தியே ஆயுதம். நித்திரையே பிரமாதம், நன்மையாயிருக்கப் பட்டதே சாவதானம். ஸமமென்றும் விஷமமென்றும் வயிரம் இரண்டு பிரகாரம். சமானமாயிருக்கப்பட்ட சத்துருவோடு வயிரம் பண்ணுவது சமவயிர மென்றுபேர். பலவந்தமாயிருக்கப்பட்ட சத்துருவோடு வயிரம் பண்ணுவது விஷம வைரமென்று பேர். சமனுயிருக்கப்பட்ட சத்துருவோடு யுத்தம் பண்ணி ஜெயிப்பது ஜெயமல்ல. பலவந்தனுயிருக்கப்பட்ட சத்துருவோடு யுத்தம் பண்ணி ஜெயிப்பதே ஜெயம் என்று பேர்.

இப்போது பத்தேகானனை ஜெயித்ததினுலேயும் முஸேகானனை நாசம் பண்ணினதனுலேயும் ராத்திரி பகல் உப்மேல் மகமதுஷா பொறுக்கப்படாமல் இருக்கிறுன். கேளும் சிவாஜி ராஜாவே! இந்த எதிலிஷாவும் டில்லிபாட்சாவும் மிலேச்சர்கள் பலிஷ்டனுயிருக்கப்பட்டவர்கள் உன்னுடைய தேசத்துக்கு சமீபத்திலே இருக்கிறுர்கள். ஆகையினுல் இங்கே இருப்பது உசிதமல்ல. எங்காகிலும் ஜெயிக்கப்படாமல் இருக்கும் துருக்கம் பார்த்து அதிலே இருந்து கொண்டு யுத்தம் பண்ணினுல் இந்த பூமியெல்லாம் சுவாதீனம் ஆகிவிடும். தேவதைகள்கூட ஈசுவரர் கயிலாச பர்வதத்தைபிடித்திருக்கிறுர்கள். தேவேந்திரன் மேரு பர்வதத்தைப் பிடித்திருக்கிறுர். மகாவிஷ்ணு க்ஷீர சமுத்திரத்திலே இடம் பண்ணிக்கொண்டிருக்கிறுர். ஆகையினுல் உனக்கு எத்தனை துருக்கங்கள், கெடிகளிருக்கிறதோ அதற்குள்ளே அசாத்தியமாயிருக்கப்பட்ட துருக்கத்திலே இருக்கவேண்டுமென்று இப்படி சொர்ண சர்மா சொன்ன யோக்கியமாயிருக்கப் பட்ட வார்த்தைகளைக்கேட்டு சிவாஜிராஜா இந்த பூமியெல்லாம் தன்னுடைய கைவசமாயிற்றென்று எண்ணி சந்தோஷப்பட்டார்.

பதினேழாம் அத்தியாயம்

இப்படியிருக்கும் போது சிறிது நாளைக்கு மேல் எதிலிஷாவினுடையபிள்ளை அல்லிஷா தன்னுடைய சேனுதிபதி அபசல்கானனை அழைத்துச்சொன்னது என்ன

---

1. மஸ்த்தகம்-தலை 2. சந்துகள்-மூட்டுகள்

வென்றால் நம்முடைய துலுக்க சாதியாயிருக்கப்பட்ட பேருக்கெல்லாம் நீ இதவாயிருக்கப்பட்டவன். தேவ பிராமணர்களுக்கு கிலேஷமாயிருக்கிறவன். இந்த கலிபுருஷனே உன்னுடைய ரூபமாய் பிறந்திருக்கிறான். பூர்வத்திலே ராம ராஜா வம்சத்து ராஜாக்களெல்லாரையும் யுத்தம் பண்ணி நீ ஜெயித்திருக்கிறாய், இப்படிப்பட்ட பிரதாபசாலி. நீ ரெங்கராஜா, கர்ணபுரத்து ராஜா, மதுராபுரத்து ராஜா, காஞ்சிபுரத்து ராஜா இவர்களோடு யுத்தம் பண்ணி ஜெயித்து வெகு திரவியங் கொண்டு வந்தாய். வீரபத்திர ராஜாவுக்கு சத்திர சாமரங்கள் கொடுத்து அவனை உனக்கு சேவகனைப்போல் பண்ணிக்கொண்டாய். சிம்மராஜா மகாசூரன். அவன் கூட உன்னைப்பார்த்து பயப்படுகிறான். இந்திர பிரஸ்த ராஜாவும் உன்னுடைய பராக்கிரமத்தைக்கேட்டு ராத்திரி பகல் நித்திரையில்லாமல் இருக்கிறான். இப்படிப் பட்டவன் நீ மகாசூரனாயிருக்கும்போது சிவாஜிராஜா என்னை ஜெயிக்கவேண்டு மென்று இருக்கிறான். அவன் வெகு சூரன். உற்சாகத்தோடு தங்களுடைய தர்மங்களை விஸ்தாரமாய் வளரச்செய்துகொண்டு துலுக்கருடைய தர்மங்க ளெல்லாம் நாசம்பண்ணிக்கொண்டு வனத்திலே விடப்பட்ட சிம்மம்போல் பயப் படாமல் என்னுடைய ஆக்ஞை எண்ணுவதில்லை. என்னுடைய தகப்பனார் மகமதுஷா ராஜபுரியீசுரனை முன்பு தானே கைவசம் பண்ணிக்கொண்டபடியினால் நல்லதாயிற்று.

இந்த சிவாஜி ராஜா சந்திரராஜாவை ஜெயித்து ஜெயவல்லி நகரம் வாங்கிக் கொண்டான். பின் ரெங்கராஜாவுக்கு நிஜாமனுடைய தேசம் சமாதானத்துக்காக கொடுத்திருந்தான். அதை நமக்கு அவமானம் பண்ணி பிடித்துக்கொண்டான். இது அல்லாமல் இருந்தாற்போல் இருந்துவந்து நம்முடைய தேசமெல்லாம் கொள்ளையடிக்கிறான். ஒரு மாதம், பதினைந்து நாள் நடக்கிறவழி நிமிஷத்திலே வந்துவிடுகிறான். மேலும் மொகல் சீமையெல்லாம் அதிகமாய் வாங்கிக்கொண்டு அவர்களை சிட்சை பண்ணுகிறான். நிஜாமனுடைய ராஜ்யம் வாங்கின பிறகு டில்லி பதியாயிருக்கிறவன் இவனுடைய பயத்தினாலே விசாரப்பட்டுக்கொண்டிருக் கிறான். என்னுடைய பாட்டனார் ஷாஜிராஜாவை மிகவும் ரெட்சித்தான். ஷாஜி ராஜாவால் தன்னுடைய பிள்ளைக்கு [1] சிஷ்சிக்கிரதுக்கு ஆகவில்லை. முன்னே என்னுடைய தகப்பனார் ஷாஜி ராஜாவைப்பிடித்து திரும்ப மரியாதையோடு விட்டு விட்டார். இந்த சிவாஜி ராஜா சிறு பிள்ளையாயிருந்தாலும் பயப்படாமல் நம்மை ஜெயிக்கிறான். நாளுக்குநாள் இந்த சிவாஜி ராஜாவினுடைய பராக்கிரமமும் பாக்கிய லெட்சுமியும் அதிகமாகிக்கொண்டு வருகிறது. இதரமாயிருக்கப்பட்ட ராஜாக்களும் அவனைத்தானே அனுசரிக்கிறார்.

இப்படி பலசாலியாயிருக்கப்பட்ட சிவாஜிராஜா நம்முடைய தேசத்திலும் கொஞ்சங் கொஞ்சமாய் தன்னுடைய சுவாதீனம் பண்ணிக்கொண்டான். முன்னே இந்த சிவாஜி ராஜாவை அடிக்கவேண்டுமென்று சூரனாயிருக்கப்பட்ட வெகு

1. சிக்ஷிப்பதற்கு.

சர்தார் கூட்டங்களை அனுப்பிவைத்தேன். அவர்களை எல்லாம் அடித்துவிட்டதாலும் இப்போது உன்னைத்தவிர இந்த சிவாஜி ராஜாவை ஜெயிப்பதற்கு ஒருவருமில்லை. ஆகையினால் நீ போய் யுத்தம் பண்ணி உயிரோடு பிடித்துக்கொண்டு வரவேண்டுமென்று இவ்விதம் அல்லிஷா சொன்ன வார்த்தைகளைக் கேட்டு அப்சல்கான் சொன்னது என்னவென்றால் எஜமான்கள் எப்படி சொல்கிறார்களோ அப்படி செய்வது சேவகருடைய காரியந்தான். சத்துருவை அடிக்கிற சாமர்த்தியம் எனக்கு இருக்கிறது. ஆகையினால் உத்தாரம் கொடுத்து அனுப்பிவைத்தால் என்னுடைய சாமர்த்தியம் தெரியவரும். அந்த சிவாஜி ராஜாவைப் பிடித்து உங்களிடம் கொண்டுவந்து விடுகிறேன். கர்னாடக தேசத்திலே வெகு ராஜாக்களை நான் ஜெயித்திருக்கிறேன். இந்த சிவாஜி ராஜாவை நான் ஜெயிக்காமல் போனால் என்னுடைய பவுஷிபந்தானென்ன இருக்கிறதென்று இப்படி சொன்னதைக் கேட்டு அந்த அப்சல்கானுக்கு வெகு வஸ்திர ஆபரணங்கள் கொடுத்து யானைகள், குதிரைகள், ஒட்டைகள், சீராபகத்ற், தன்னுடைய விருதுகள், பொன், வெள்ளி போட்ட கட்டில்கள் இன்னும் வெகு சாமான், வெகு திரவியமும் கொடுத்து தன் கை கத்தியும் கட்டாரியும் கொடுத்து அல்லிஷா அப்சல்கானுக்கு உத்தாரம் கொடுத்து அனுப்பிவைத்தார்.

அப்போது அப்சல்கான் தண்டகப்படிக்கு அல்லிஷாவுக்கு முசிரா பண்ணிப்போகும்போது அவனுக்கு சகாயமாய் சம்பர்கான், யாகூப்கான், பட்டாணி, மூஸேகான், அசனகான், ரெணதுல்லாகான், அங்குசகான், பர்பர்கான், இலால்கான் இப்படிப்பட்ட துலுக்க சர்தார்களும் இதுதவிர பாண்டல் நாயக்கன், கருடநாயக்கன், கலியாணநாயக்கன் இவர்களெல்லாம் அவரவருடைய சேனைகளோடு அப்சல்கான் பின்னோடு அனுப்பிவைத்தார். அவனும் முகூர்த்தம் பார்த்துக்கொண்டு புறப்படும்போது அபசகுனமானது. என்னவென்றால் காக்கைகள் கத்திக்கொண்டு இடப்புறத்திலே போயிற்று. நல்ல [1] உருமத்திலே சூரியன் பிரகாசமில்லாமல் போயிற்று. ஆகாசமார்க்கத்திலே புகை தென்பட்டது. [2] குறக்கொள்ளிகள் விழத்தலைப்பட்டது. மேகங்களில்லாமல் மின்னல் மின்னிற்று. நரிகள் கூப்பிட்டன. [3] செண்டா ஒடிந்து விழுந்து மண்ணும் கல்லுமாய் காற்றடித்தது. சேனைக்கு முன்னே போகும் [4] நிசான் யானை நடக்க மாட்டாமல் என்ன அடித்தாலும் அங்கேயே சுற்றத்தலைப்பட்டது.

இப்படிப்பட்ட அபசகுனங்களாலும் அதை எண்ணாமல் யுத்தம் செய்ய வேண்டுமென்னும் உற்சாகத்தினாலே விஜய நகரத்திலிருந்து புறப்பட்டு ஆறு கோசத்துக்கு அப்பாலே போய் அப்சல்கான் இறங்கின அங்கே சர்தார் கூட்டங்கள் தங்கள் தங்கள் சேனையோடு வந்துசேர்ந்தார்கள். அந்த சேனையைப்

1. உருமம்—மத்தியானம் 2. குறைக்கொள்ளிகள்போலும்
3. செண்டா—கொடி 4. நிசான்யானை—கொடியேந்திச்செல்லும் யானை

பார்த்தால் சமுத்திரம் வந்து இறங்கினதுபோல் தோன்றிற்று. அவரவர்கள் கூடாரங்கள் படுதாக்கள் போட்டது எப்படி இருந்ததென்றால் ஆகாசத்தை மறைத்தாற்போல் இருந்தது. யானை குதிரைகளுடைய சப்தத்தினாலே நாலு திக்கும் ஆயிற்று. இரவும் பகலும் வெகு ஜாக்கிரதையாய் பாராசவுக்கை பண்ணிக்கொண்டு வெகு கர்வத்தோடு சேனைகளுடன் அப்சல்கான் விராட தேசத்துக்கு சமீபத்திலே வந்து இறங்கினான்.

பதினெட்டாம் அத்தியாயம்

அதற்கு மேல் பிராமணர் கவீந்திரரைப் பார்த்துக் கேட்டது. சிவாஜி ராஜா புனாவிலே இருக்கையில் அப்சல்கான் விராட தேசத்துக்குப் போகவேண்டிய காரிய மென்னவென்று கேட்கும்போது அது காரணம் சொல்கிறேனென்று கவீந்திரர் சொல்கிறார்.

அது என்ன வென்றால் சிவாஜி ராஜா, பாஜிராவ், கிருஷ்ணராவ் இவர்கள் இரண்டுபேர்களுடைய தகப்பனார் சந்திரராவ் என்கிறவரை ஜெயித்து அவருடைய ஜெயவல்லி என்கிற நகரத்தை வாங்கினார். இந்த ஜெயவல்லி பெரிய துருக்கம். அந்தத் துருக்கத்திற்கு மலைகளே அலங்கமாயிருக்கிறது. ஒருவராலேயும் வாங்கப்படாமலிருக்கிற அந்த நகரத்தை வாங்கி சந்திரராயருடைய தம்பி தமையன் எல்லோரையும் அடித்துப்போட்டார். அதில் சந்திர ராயருடைய தம்பி பிரதாபவர்மா என்கிறவன் தப்பி சிவாஜி ராஜாவினுடைய பயத்தினாலே ஓடிப்போய் எதில்ஷாவிடம் போய் வெகு உபசாரம் பண்ணினான். அவனை எதில்ஷா பயப்படாதேயென்று சிவாஜிராஜாவை அடித்து உன்னுடைய தேசத்தை உனக்கு வாங்கிக்கொடுக்கிறேனென்று பரவசமாய் சொன்னான். அதனால் அந்த பிரதாபவர்மா சந்தோஷப்பட்டு இந்த அப்துல்கானோடு கூடிக்கொண்டு பிதுபா பண்ணுகிற யோசனைகளெல்லாம் அப்துல்கானுக்கு சொல்லிக்கொண்டு விராட தேசத்துக்கு அழைத்துக்கொண்டு வந்தான். ஜெயவல்லி துருக்கத்துக்கு எஜமான் எவனோ அவனோடு அந்த விராடதேசம் சேர்ந்தது. சைய பர்வதம் முதற் கொண்டு இருக்கப்பட்ட சீமைகளெல்லாம் ஜெயவல்லி நகரத்தைச் சேர்ந்ததான படியினாலே அந்த ஜெயவல்லி துருக்கத்தை வாங்கவேண்டுமென்று அப்துல்கான் விராட தேசத்திற்குப் போனாரென்று கவீந்திரர் பிராமணருக்குச் சொன்னார்.

அதன்பிறகு அப்சல் ஜெயவல்லி துருக்கத்தை வாங்கவேண்டுமென்று சமீபத்திலே போய் இறங்கினான். அப்போது சிவாஜி வெகு சமர்த்தனாயிருக்கப் பட்டவர் மனதிலே யோசனை பண்ணிக்கொண்டு எதல்ஷா அப்சல்கானனை என்பேரிலே அனுப்பி வைத்திருக்கிறார். இவனும் தன்னுடைய பராகிரமத்தை காண்பிப்பான். இவனுக்கு தயவு தாட்சண்யமில்லை. வெகு கோபிஷ்டன். பிராமணர்களைக் கண்டால் அடிக்கிறவன். தர்மத்தை நாசம் பண்ணுகிறவன்.

பசுக்களை சம்ஹாரம் பண்ணுகிறவன் ஆகையினால் இப்படிப்பட்ட பாபிஷ்டனை தர்மமாயிருக்கப்பட்ட பூமியில் வைக்கக்கூடாது, அடிக்கவேண்டும். இந்த பூமி தர்மத்தை அனுசரித்துக்கொண்டிருக்கிறாள். அந்த தர்மத்தை தேவதைகள் அனுசரித்திருக்கிறார்கள். அந்த தேவதைகளை பிராமணர்கள் பிடித்திருக்கிறார்கள். ஆகையினால் சகலத்திற்கும் பிராமணர்களே காரணம். அப்படிப்பட்ட பிராமணர்களை ரெட்சிக்கவேண்டும், பூசை பண்ணவேண்டுமென்றும், துஷ்டர்களை சம்ஹாரம் பண்ணவேண்டுமென்றும் ஸ்ரீ பகவான் அந்த யுகத்திலே அவதாரம் பண்ணி தர்மத்தை ரெட்சித்துக்கொண்டு வந்தார்.

சங்காசுரன் வேதத்தை திருடிக்கொண்டு சமுத்திரத்துக்குள்ளே போய் ஒளிந்துகொண்டான். அப்படி ஒளிந்துகொண்டவனை மட்சாவதாரமெடுத்து அவனை அடித்து வேதங்களைக்கொண்டுவந்தார். கூர்மாவதாரமெடுத்து மந்தர பர்வதத்தை முதுகிலே தாங்கினார். வராக அவதாரமெடுத்து பூமியைக் கடவாய் சிங்கப்பல்லினாலே எடுத்தார். நரசிம்மாவதாரமெடுத்து இரணியாட்ச இரண்ய கசிபுவை அடித்து பிரகலாதனை ரெட்சித்தார். வாமன அவதாரமெடுத்து பலிசக்ரவர்த்தியை பாதாளத்திலே அமுக்கினார். பரசுராம அவதாரமெடுத்து கார்த்த வீரியார்ச்சுனன், க்ஷத்திரியர் முதலானபேரை சம்ஹாரம் பண்ணினார். ஸ்ரீ ராம அவதார மெடுத்து சேது பந்தனம் பண்ணி ராவணனை சம்ஹாரம் பண்ணினார். கிருஷ்ணவதாரமெடுத்து கம்சாசுரன் முதலான அசுரர்களை சம்ஹாரம் பண்ணினார். அப்படிப்பட்ட ஈசுவரன் நான். இந்தப் பூபாரத்தை தீர்க்கவேண்டியே இந்த ரூபமாய் அவதரித்திருக்கிறேன். இந்த துலுக்கர் எல்லோரும் தயித்தியாளுடைய அம்சம். தன்னுடைய மதத்தினாலே தர்மத்தை முழுகடிக்கவேண்டுமென்று இருக்கிறார். இந்த துலுக்கரை எல்லாம் அடித்து சம்ஹாரம் பண்ணி தர்மமாயிருக்கப்பட்ட மார்க்கத்தை விருத்தியாக்குகிறேன் என்று மனதிலே யோசனை பண்ணி தன்னுடைய கெடி ஸ்தலங்கள் யெது யெது உண்டோ அவற்றையெல்லாம் ரெட்சிக்கவேண்டிய சர்தார் கூட்டங்களை வைத்துவிட்டு தன் கால் பலத்துடனே ஜெயவல்லி நகரத்துக்கு வந்துசேர்ந்தார்.

அதன் பிறகு சிவாஜிராஜா ஒருவருக்கும் தெரியாமல் ஜெயவல்லி நகரத்திலே வந்துசேர்ந்து தன்னோடு சண்டைபோட வேண்டுமென்று தயாரா யிருக்கிற சமாசாரம் அப்சல்கான் கேட்டு சிவாஜிராஜாவுக்கு காகிதம் எழுதி அனுப்பிவைத்தான்.

அது என்னவென்றால் ஓய் சிவாஜிராசாவே! நீ பண்ணுகிற துடுக்குத் தனம், சோருவரியெல்லாம் எதிலிஷாவுக்கு வெகு கோபமாயிருக்கிறது. நிஜாமன் நாசத்தை அடைந்தபடியினாலே உனக்கு நல்லதாயிற்று. மொகலனுக்கு எதிலிஷா வெகு சீமை கொடுத்திருக்கிறார். அந்த சீமையை நீ கட்டினாய். இராசபுரியீசுவர னென்கிறவன் உன்பேரிலே வெகு கோபமாயிருக்கிறான். சந்திர

ராஜர்வை அடித்துப் பலவந்தமாய் அவனுடைய சீமையைக் கட்டிக்கொண்டாய் கலியாணபுரம் வாங்கினுய். பீமபுரியும் வாங்கினுய். துலுக்கருடைய ஸ்தலங்கள் எது எது உண்டோ அவற்றையெல்லாம் நாசம் பண்ணினுய். அவர்களெல்லாம் உன்பேரிலே வெகு கோபமாயிருக்கிறுர். துலுக்கருடைய மதத்தை நடக்கவொட்டாமல் பண்ணினுய். இது தவிர பயமில்லாமல் சக்ரவர்த்தி ராஜாக்கள் கொடுக்கும் விருதுகளை நீ வைத்துக்கொண்டிருக்கிறுய். பொன்னுலே இருக்கப்பட்ட சிம்மாசனத்தை நடத்திக்கொண்டுவருகிறுய். யாரை வணங்கி நமஸ்காரம் பண்ணவேண்டுமோ அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணுவதில்லை. நீ சுதந்திரனுய் இருக்கிறபடியினுலே நீ எவனுக்குப் பயப்படுவாயோ அப்படிப்பட்ட என்னை எதிலிஷா அனுப்பியிருக்கிறுர்.

மூஸேகான் முதலான மகா சூரராயிருக்கப்பட்டவர்கள் இந்த ஜெயவல்லி நகரத்தை வாங்குவதற்கு என்னை துரிதப்படுத்துகிறுர்கள். ஆகையினுல் என்னுடைய ஆக்ஞையினுலே சமாதானம் பண்ணிக்கொள். சகல கெடிகளும், சகலதேசமும் இது தவிர சிம்மக்கெடி, லோககெடி, புரந்தர்கெடி, சக்கிராவதிபுரி, நீராதேசம் இவற்றையெல்லாம் நமஸ்காரத்தை பண்ணி டில்லீசுரனுக்குக் கொடுத்து சுகமாயிரு. சந்திர ராஜாவை அடித்து வாங்கின இந்த ஜெயவல்லி நகரத்தை அல்லீஷாவுக்குக் கொடுத்துவிடு என்று இவ்விதம் அப்சல்கான் காகிதம் எழுதி அனுப்பிவைத்தான்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

சிவாஜிராஜா காகிதத்தைப் படித்துப்பார்த்து அந்த பாவம் மனதிலே வைத்துக்கொண்டு தான் ஒரு யோசனையைப்பண்ணி அந்த அப்சல்சானுக்குப் பதில் காகிதம் எழுதினுர். கர்னுடக ராஜாக்கள் வெகுபேரை எவன் அடித்தானே அவனுடைய தயவு என்மேலே எப்போதாயிற்ருே அப்போதே எனக்கு அனுகூலமாயிற்று. உன்னுடைய [1] பாவுபலம் அதிகமாயிருக்கிறது. நீ பிரதாபவந்தன். சேனையும் மிகுதியாயிருக்கிறது. இந்த பூமண்டலமெல்லாம் உனக்கு சுவாதீனமாயிருக்கிறது. ஆகையினுல் உன்னிடத்திலே எனக்குக் கபடமில்லை. இந்த வனத்திலே என்னென்ன பதார்த்தங்களிருக்கிறதோ அவற்றையெல்லாம் நீ இங்கே வந்து பார்க்கலாம். உன்னைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை எனக்கு மிகவும் உள்ளது. இந்த ஜெயவல்லி நகரத்தையும் பார்க்கலாம். நீ வந்தாய் என்கிற சமாசாரம் கேட்டேன். அதனுல் எனக்கு சந்தோஷமாயிற்று. எனக்கு வெகு பாக்கியம் வரும். நீ வெகு சூரன். உன்னைத்தவிர இந்த எதிலிஷாவினுடைய சேனையைத் திரணமாய் எண்ணுகிறேன். உனக்கு வழிவிட்டிருக்கிறது. நீ இங்கே வந்தால் உனக்கு சகல கெடி ஸ்தலங்களும் கொடுக்கிறேன். நீ கேட்ட

1, பாகுபலம் - தோள்வலிமை

தனுல் இந்த ஜெயவல்லி நகரத்தையும் கொடுக்கிறேன். உன்னுடைய ரூபம் மகா பயங்கரமாயிருக்கிறது. அந்த பயத்தினுலே என் கை கத்தியும் உனக்குக் கொடுக்கிறேன். உன்னுடைய சேனேயும் இந்த வனத்தைப் பார்த்து சுகப்படும் என்று இவ்விதம் காகிதம் எழுதி கெட்டிக்க ரனைப் பார்த்து ஒரு மனிதன் கையிலே கொடுத்து அப்சல்கானிடம் அனுப்பி வைத்தார்.

அந்த அப்சல்கான் காகிதத்தை பார்த்துக்கொண்டு அறுகாத வழிக் கப்பாலே இருக்கிற ஜெயவல்லி நகரத்தை கைவசமாயிற்றென்று எண்ணிக் கொண்டான். அதன் பிறகு அப்சல்கான் தன்னுடைய சேனுதிபதியை அழைத்துச் சொன்னது, சிவாஜி ராஜா சமாதானம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்று என்னே ஜெயவல்லி நகரத்திற்கு அழைக்கிருன். சாமிகாரியம் சாதிக்கவேண்டி எனக்கு அங்கே போகவேண்டியிருக்கிறது. நீயும் சேனேயோடு கூடவா. அங்கே ஒருவருக்கும் பயமில்லே. அது மகா அகோரமாயிருக்கப்பட்ட வனம். அந்த வனத்திலே ஆகாசத்தினுடைய வெளிச்சங்கூட தெரிவதில்லே. சிம்மங்கள், காட்டு யானேகள், புலிகள், கரடிகள் திரிந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வனத்தை நீபார்க்கவேண்டும். அந்த வனத்திலே நம்முடைய யானேகள் சுகமாய் சஞ்சரிக்கும். எனக்கு புத்தி மோசம் வரமாட்டாது. சிவாஜி ராஜா என்னுடைய வார்த்தைபடி நடவாமல் போனுல் இந்த பூமியை பேதிச்சுப்போடுவேன். பர்வதங்களே இடித்துப்போடுவேன் சகலத்தையும் பஸ்மீகரமாய் செய்திடுவே னென்று வெகு ஆத்திரத்தோடு பேசுவதைப் பார்த்து அவனுடைய சேனுதிபதி பதில் உத்தரவு சொல்லாமலிருந்து விட்டான்.

அதன்பிறகு அப்சல்கான் பயணமாய் புறப்படும்போது சகலமான மந்திரி களும் வந்து வெகு வணக்கத்தோடு சொன்னது. நீங்கள் செய்யும் காரியம் செய்யுங்கள். உங்கள் பேச்சுக்கு தடை பண்ணுகிறவன் யாரிருக்கிருர். ஆனுல் தெய்வ சகாயம் எங்கு இருக்கிறதோ தெரியாது. சிவாஜி ராஜா உன்னிடத்திலே விசுவாசமாயிருந்தாரானுல் இந்த க்ஷணம் ஜெயவல்லி நகரத்தைவிட்டு வெளியே வந்து உம்மைக் கண்டு முசிரா பண்ணிக் கேட்டதையெல்லாம் கொடுப்பார். இந்த சிவாஜி ராஜா செம்போ மகாதேவரை தவிர தன்னுடைய சிரசை வணங்கி ஒருவருக்கும் சலாம் பண்ணினதில்லே. சொப்பனத்திலேகூட இரண்டாம்பேரை வணங்கினதில்லே. சிறுபிள்ளே முதற்கொண்டு இதுவரைக்கும் அவர் பண்ணின காரியங்கள் தேவதைகள் பண்ணின காரியங்கள்போலே கேட்கப்படுகிறது. இதுவுமன்றி நம் துலுக்கருடைய சாஸ்திரங்களெல்லாம் அவருக்கு நன்ருய்த் தெரியும், ஆனுலும் தன்னுடைய தர்மசாஸ்திரப்படி நடக்கிறவன் நம்முடைய சாஸ்திரத்தை எண்ணுவதில்லே.

அப்படிப்பட்ட சிவாஜி ராஜா பயமில்லாமல் உன்னே அழைக்கிருன். ஆகையினுல் அவன் மனதிலே ஒரு யோசனே பண்ணிக்கொண்டிருக்கிருன். இது

தவிர எத்தனை மனிதரை விட்டு இந்தவழி சேவை பண்ணினாலும் மலையடியான படியினாலே செம்மை பண்ணப்படவில்லை. இப்படிப்பட்ட வழியிலே குதிரைகள் எப்படிபோகும். பெரிய பெரிய விருட்சங்களெல்லாம் ஒன்றுக்கொன்று பின்னி வழியை மறித்துக் கொண்டிருக்கிறது. அதனாலே யானைகள் போக மாட்டாது. நீயானால் அல்லிஷாவினுடைய சரீ(ர)மே. டில்லீசுரனுக்குக் கூட உன்னுடைய பயமிருக்கிறது. இந்த சேனைக்கெல்லாம் நாயகனாயிருக்கிறபடியினால் இப்படி கடினமாயிருக்கப்பட்ட வழியில் போகவேண்டாம்.

சிவாஜி ராஜாவானால் யோகீஸ்வரனைப்போலே ஆகாரம் நித்திரையை விட்டுவிட்டு சர்வக்ஞனாயிருக்கிறான். சமஸ்தான ஜனங்கள் மனதிலேயிருக்கப் பட்ட பாவங்களை அறியக்கூடியவன். பர்வதத்தினுடைய சிகரத்திலேயிருந்து குதித்து அடிக்கிற சாமர்த்தியமுண்டு. சர்ப்பத்தைக் கண்ட கருடன் எப்படி விழுந்து அடிப்பானோ அதுபோலே அடிப்பான். எத்தனைக் காதவழியிலே இருந்தாலும் நிமிஷத்திலே வந்துசேருவான். அவன் வருவது ஒருவருக்கும் தெரியாது. நீ முன்னே துளஜா பவானி அம்மனுக்கு வெகு அபகாரத்தைப் பண்ணியிருக்கிறாய். அவன் உன்னுடைய புத்திக்கு பிரமை போட்டிருக்கிறான். சிவாஜி ராஜாவுக்கு சகாயம் பண்ணுகிறார். ஆகையினாலே வெகு சேனையோடு சிவாஜி ராஜாவால் ரெட்சிக்கப்பட்ட இந்த துருக்கம் உமக்கு எப்படி கைவசமாகும் என்று மந்திரிகள் சொன்ன வார்த்தைகளைக்கேட்டு கண்கள் சிவக்கப்பண்ணி கோபத்தோடு சேனாதிபதிகளுடைய வார்த்தைகளை தள்ளிப்போட்டு சொன்னது என்னவென்றால் வெகுநாளாய் கர்வத்தினாலே எனக்கு அபராதம் பண்ணினவன் என் முன்னே எப்படி வருவான். சிவாஜிராஜா பண்ணின காரியமெல்லாம் நீங்கள் வெகுவாய் சிலாகித்துக் கொள்கிறீர்கள். அது எனக்குத் தெரியும். என்னுடைய சாமர்த்தியம் தெரியாது. என்னுடைய குதிரைகள் போகிற வேகத்தினாலே கர்னாடக ராஜாக்களுடைய சேனை நசுங்கிப்போயிற்று. தேவதை களுடைய சேனைகளையும்கூட ஜெயிப்பேன். நான் கோபிஷ்டனென்று அறிந்து எமதர்மராஜாவும்கூட எனக்கு சகாயமாயிருந்து என்னை சமாதானம் பண்ணிக் கொள்வான். ஆகையினால் இந்த ஜெயவல்லி துருக்கத்தினுடைய மார்க்கம் வெகு கடினமாயிருந்தாலும் யெல்லாம் வெட்டி நிரவிப்போடுவேனென்று இவ்விதம் சொல்லிப் புறப்பட்டான்.

இருபதாம் அத்தியாயம்

இப்படியிருக்கும்போது பக்தர்களை ரெட்சிக்கிற துளஜா பவானி அம்மன் சிவாஜி ராஜாவுக்கு பிரத்யட்சமாய் தன்னுடைய ரூபத்தைக் காண்பித்தாள். அப்போது சிவாஜி ராஜா அம்மனைப் பார்த்து சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் பண்ணி கைகட்டிக்கொண்டு நின்றார். அவரைப் பார்த்து அம்மன் சொன்னது : இங்கே வா குழந்தாய்! இந்த அப்சல்கான் என்கிற துலுக்கன் துஷ்டன்

உன்னோடு சண்டைக்கு வந்திருக்கிறுன். அவன் தேவபிராமணர்களுக்கு வெகு கண்டகனுயிருக்கிறுன். என்னுடைய கபடத்திஞல் அவனுடைய புத்திக்கு பிரமை போட்டபடியினுலே உன்னிடம் வருகிறுன். அப்படிப்பட்டவனை கத்தி யினுலே இரண்டாய் வெட்டி கீழே தள்ளிவிடு. நீ கிருஷ்ணுவதாரம் பண்ணின போது உனக்கு சகாயமாய் நான் சொர்க்கத்திலே இருந்து நந்தனுடைய வீட்டிலே அவதரித்தேன். இப்பவும் உனக்கு சகாயம் பண்ணுகிற நிமித்தியம் துளஜாபுரம் விட்டு உன்னிடம் வந்தேன். உன் கையினுலே அவனுக்கு மரணமிருக்கிறதென்று இவ்விதம் சொல்லி அந்தர்தியானமாஞள்.

அதைப்பார்த்து கான் சொப்பனந்தான் கண்டேனேவென்று பிரமித்துக் கொண்டு அந்த அம்மனுடைய ரூபத்தை தியானம் பண்ணிக்கொண்டு சதிரிலே வந்து தன்னுடைய சேனுதிபதிகளை அழைத்துச்சொன்னது, இந்த அப்சல்கான் சேனையோடு என்னுடைய சமாதானத்துக்கு வருகிறுன். ஆகையினுல் அந்த சேனை வழிக்கு நீங்கள் போகவேண்டாம். அவன் ஆயுதத்துடனே என்னுடைய பேட்டிக்கு வருகிறுன். நீங்களிருந்தால் அவன் பயப்படுவான். ஆகையினுல் நீங்களெல்லோரும் ஆயுதத்துடனே ஒருவருக்கும் தெரியாமல் கிட்டமாய் இந்தக் காட்டிலே மறைந்து கொண்டிருங்கள். அந்தத் துலுக்கன் வந்து சமாதான மில்லாவிட்டால் நகாரா சத்தம் கேட்டு அவனுடைய சேனைமேல் போய் விழுந்து அடியுங்கள் என்று ரகசியமாய் சர்தார்களுக்குச் சொல்லி அனுப்பி வைத்தார்.

அதன் பிறகு அந்த அப்சல்கான் அந்த துருக்கத்து மலை ஓரமாய் வந்து யானைகள் குதிரைகள் ஒட்டைகள் சேனைகளை எல்லாம் மலைமேல் ஏறச்சொல்லி உத்தாரம் கொடுத்தார். அப்போது அவரவர் வெகு கடினத்தோடு மலைமேல் ஏறுகிறபோது முன்னே யானைகளும் ஏறுவதனுல் அந்த மலைகளிலே இருக்கப்பட்ட கற்கள் உருண்டு பின்னுல் வருகிற ஜனங்கள் பேரிலே விழுந்து அதனுல் சிறிது ஜனங்கள் சேதமாகி நாசத்தை அடைந்தார்கள். இதல்லாமல் ஜனங்கள் ஏறுகிற போது செடிகளுடைய கொம்புகள் பிடித்துக்கொண்டும் சின்னஞ்சிறிய செடிகளைப் பிடித்துக்கொண்டும் ஏறுகிறபோது அந்த செடிகளுடைய கொம்புகள் ஒடிந்து விழுகிற பேரும், செடிகளை வேரோடு பிடுங்கிக்கொண்டு விழுகிற பேரும், இப்படி சிறிது ஜனங்கள் சேதப்பட்டுப் போனுர்கள். அந்த மலைமேல் இருக்கப்பட்ட மூங்கில் குத்துகளிலே நிசானங்களும், கொடைகளும், சாமரங்களும் சிக்கிக் கொண்டு சின்ன பின்னமாய் விழத் தலைப்பட்டது.

இவ்விதம் கடினத்தோடு சேனைகளை மலைமேல் ஏற்றுவித்து போகும் போது இந்த ஜெயவல்லி நகரம் நமக்கு கைவசமாயிற்றென்று அப்சல்கான் மனதிலே எண்ணிக்கொண்டான். இந்த அப்சல்கான் மலைமேல் வந்த சேதி சிவாஜி ராஜா கேட்டு தெய்வ அனுகூலமாய் இந்தத் துலுக்கன் என் கைகளிலே அகப்பட்டுக்கொண்டான் என்று மனதிலே எண்ணிக்கொண்டான். அதன் பிறகு

அப்சல்கான் தன்னுடைய சேனையை எல்லாம் குமுதவதி என்கிற ஆற்றங்கரை ஓரமாய் பதுங்க வைத்து அதற்குமேல் அப்சல்கானனும் சிவாஜி ராஜாவும் ஒருவருக்கொருவர் தூதுகளை அனுப்பிவித்து பேச்சு வார்த்தைகள் நடந்தது.

சிவாஜி ராஜா தன்னுடைய பிரதானிகளை அழைத்துச் சொன்னது; வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால் யார் யாருக்கு எப்படி உபசாரம் பண்ண வேண்டுமோ அப்படி பண்ணவேண்டும். ஆகையினால் இந்த அப்சல்கான் பிள்ளைகளோடும் பந்து ஜனங்கள் சேனாதிபதிகளோடுங்கூட வந்திருக்கிறான். அவர்கள் பேர்வழி, முஸேகான், அங்குசகான், யாகூத்கான், அம்பர்கான், அசனகான் முதலானோர். அவனுக்குப் பெரிய தகப்பனாரயிருக்கப்பட்ட அம்பராசுகான் இன்னும் சிறிது உறவு முறை கூட்டங்கள், சர்தார் கூட்டங்கள் வந்திருக்கிறார்கள். அவரவர்களுக்குத் தக்கனையாய் பதக்கங்கள், முத்து ஆரங்கள் [1] துத்துகள், [2] சாதுராக்கள் கொடுக்க வேண்டும். அதற்கு ரெத்தின பரீக்ஷகர்களை அழைத்து அதற்குத்தக்க எத்தினங்களை பண்ணிக்கொண்டு இருக்கச்சொல்லி சொன்னார்.

இந்த சேதி அப்சல்கான் கேட்டு தன்னிடமுள்ள வர்த்தகர்களை அனுப்பி வைத்தான். அவர்கள் வந்து தன்னிடமுள்ள ரெத்தினங்கள், ஆபரணங்களை காண்பித்தார்கள். அதெல்லாம் சிவாஜிராஜா விலைக்கு வாங்கிக்கொண்டு அவர்களையும் கிட்டே வைத்துக்கொண்டார். இந்த சேதி அப்சல்கான் கேட்டு சிவாஜிராஜாவுக்குத் தன்பேரிலே வெகு விசுவாசமாயிருக்கிறதென்று எண்ணிக் கொண்டு மனதிலே ஒரு உபாயத்தை நினைத்தது என்னவென்றால் பேட்டிக்குப் போகும் போது [3] சமுதாடு ஒளி (த்து) க்கொண்டுபோய் ராஜாவிடம் போன வுடனே அந்த சமுதாடுவினாலே குத்தி தேவதைகளுக்குக்கூட பயம் வரத்தக்க தாய் பண்ணவேண்டுமென்று மனதிலே நினைத்தான்.

இருபத்தி ஒன்றும் அத்தியாயம்

அந்த யோசனை சிவாஜி ராஜாவுக்குத் தெரிந்து இப்படிப்பட்ட பாபிஷ்டனை பதில் கிரியை பண்ணவேண்டுமென்று யோசனை பண்ணினார். அதன் பிறகு சிவாஜி ராஜா தூதனிடம் சொல்லி அனுப்பினது, சேனையெல்லாம் ஒரு பக்கத்திலே வைத்து நீ மட்டும் உறை போட்ட ஆயுதத்தோடு மூன்று நான்கு பேரோடு பல்லக்கில் உட்கார்ந்துகொண்டு இந்தப் பிரதாப பர்வத சமீபத்திலே வந்து பேட்டி வாங்கு. உனக்குப் பண்ணவேண்டிய உபசாரமெல்லாம் பண்ணுகிறே மென்று சொல்லி அனுப்புவித்தபடி அவனும் அவ்விதம் வெகு பராக்கிரம சாலியா யிருக்கப்பட்ட அப்சல்கான் அந்த பர்வத சமீபத்திலே வந்து சேர்ந்தான்.

---

1. துத்து—கம்பளி 2. சாதரா—பொன்னுடை.
3. சமுதாடு—ஓராயுதம்.

அந்த சேதி சிவாஜி ராஜா கேட்டு செய்போ மகாதேவருடைய பூஜை பண்ணி நித்திய தானங்கள் பண்ணி கொஞ்ச ஆகாரமும் பண்ணி, ஆசமனியம் பண்ணிக்கொண்டு துளஜா தேவி அம்மனுடைய தியானம் பண்ணி அதன் பிறகு சீலை புடவைகள் போட்டுக்கொண்டு தன்னுடைய புரோகிதருக்கும் பெரிய பெரிய பிராமணர்களுக்கும் நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு தயிர், அருகம் புல், அட்சதைகளைத் தொட்டு சூரிய மண்டலத்தை தரிசனம் பண்ணி அப்போது சொர்ண அலங்கார கோதானம் பண்ணி சூரர்களாயிருக்கப்பட்ட சர்தார்களை துருக்கத்தை சாவதானமாய் ரெட்சித்துக்கொண்டிருங்கள் என்று சொல்லி ஆர்ஞாபித்து தான் கத்தியும் பட்டாவும் தரித்துக்கொண்டு புறப்பட்டுப் போகும்போது ஜனங்கள் பார்த்து மகாவிஷ்ணுவானவர் கதையை தரித்துக் கொண்டு வந்தாலெப்படியோ அதுபோலிருந்தது என்று பாவித்துக்கொண்டார்கள்.

சிவாஜிராஜா அப்சல்கானிடம் போகும்போது அவன் ராஜாவைப் பார்த்தான். இவரும் அவனைப்பார்த்தார். சிவாஜிக்கு தன்னிடத்திலே விசுவாசம் வரவேண்டுமென்று தன் கையிலுள்ள கத்தியை கிட்டே யிருக்கிறவன் கையில் கொடுத்து ராஜாவைப் பார்த்து பேசினது, என்னவென்றால் ஓய்! ராஜாவே [1] வியர்த்தமாய் யுத்தத்தை இச்சிக்கிறாய். நியாயமாயிருக்கப்பட்ட மார்க்கத்தை விட்டு நியாயம் தப்பின மார்க்கத்தில் ஏன் நடக்கிறாய். எதிலிஷாவுக்கும் சூரனா யிருக்கப்பட்ட டில்லீசுரனுக்கும் எண்ணாமல் கர்வத்தோடு இருக்கிறாய். ஆகை யினால் உன்னை பிடித்துக்கொண்டுபோகும் நிமித்தியமாய் நான் வந்தேன். இந்தத்துருக்கத்தை எனக்குக் கொடு. கபடமாயிருக்கப்பட்ட புத்தியை விட்டுவிடு. எனக்கு சரணமாய் வந்தால் நல்லது. இல்லாவிட்டால் உன்னைப்பிடித்து விசைய நகரத்துக்கு கொண்டுபோய் அலிஷாவுக்கு முன்னே உன் தலையை வணக்கி, நமஸ்காரம் பண்ணிவைத்து அதன் பிறகு உன்னை ராஜா வென்று சொல்லி பாக்யத்தைக்கொடுக்கிறேன். ஆகையினால் பயத்தை விட்டுவிட்டு உன்கையினாலே என் கையைப் பிடித்து ஆலிங்கனத்தைக்கொடு என்று இந்தப்பிரகாரம் பேசி இடது கையினாலே ராஜாவினுடைய கழுத்தைப் பிடித்து வலது கையினாலே சமுதாடு வாங்கி வயிற்றிலே வைத்தான்.

அப்போது சிவாஜி ராஜா சமத்தனான படியினாலே அவன் கையிலே அகப் பட்ட கழுத்தை விடுவித்துக்கொண்டு வயிற்றிலே வைத்த சமுதாடையும் தப்பித்துக்கொண்டு அப்சல்கானுடனே பேசினது, ஓய்! துலுக்கனே உனக்கு நான் கத்தியைக் கொடுக்கிறேன், வாங்கிக்கொள் என்று சொல்லி கத்தியினாலே முதுகு மட்டுக்கும் தடாரிச்சு உருகுருப்போலே வயிற்றிலே குத்தினான். அது எப்படி போலே யென்றால் சுப்ரமணியருடைய வேலாயுதமானது கிரவுஞ்ச பர்வதத்தை எப்படி பேதிச்சுதோ அப்படி பேதிச்சு வயிற்றிலே இருக்கப்பட்ட

1. விறத்தமாய் என்றுளது.

குடல் வெளியே புறப்பட்டது. இரத்தப் பிரவாகமாயிற்று. அப்போது அப்சல் கான் அந்தக்குடலை கையினலே பிடித்துக் கொண்டு கிட்டேயிருக்கிறவனைப் பார்த்துச் சொன்னது, சிவாஜி ராஜா என்னை அடித்து விட்டான். அதற்கு பதில் பழி நீங்கள் வாங்குங்கள் என்று சொன்னான்.

அப்போது அப்சல்கானுடைய கத்தியை அவனிடமிருக்கிற பிராமணன் வாங்கிக்கொண்டு நான் பிராமணனானபடியினலே என்னை சிவாஜி ராஜா அடிக்க மாட்டாரென்று எண்ணிக்கொண்டு கத்தியினலே சிவாஜி ராஜாவை அடிக்க வந்தான். பிராமணனை அடிக்கலாகாதென்று சிவாஜி ராஜா எண்ணி அந்தக்கத்தி வெட்டை தப்பித்துக்கொண்டு தன் கத்தியினலே அப்சலாகானுடைய கழுத்தை அறுத்துப்போட்டான். அப்போது அப்சலாகானுடைய சிரசு கீழே விழுந்தது பர்வதத்தினுடைய சிகரம் கீழே விழுந்தால் எப்படி முண்டமாய் இருக்குமோ அப்படி முண்டமாய் கீழே விழுந்தான். அப்போது சிவாஜி ராஜா தேவேந்திரனைப் போலே சோபித்தான். அப்சலாகானுடைய சிரசொருபக்கம் தலையொரு பக்கம், குடலொருபக்கம், தலைப்பாகை ஒரு பக்கம், முத்து ஆரங்கள், பதக்கங்கள் ஒரு பக்கம் இப்படி மூலைக்கு மூலையாய் விழுந்து புரண்டது.

இந்த சேதி அப்சலாகானுடைய சர்தார் கூட்டங்கள் கேட்டு ஓடிவந்து அப்சலாகானுடைய அவஸ்தைகளைப் பார்த்து வெகு ஆக்கிரகத்தினலே சிவாஜி ராஜாவை அடிக்கவேண்டுமென்று எல்லோருமாய் ஏகோபித்துக்கொண்டு வந்த பேர்வழிகள் யாரென்றல் சையிதுகான், வதுல்கான், படேகான், சையிதகான், ரஹீம்கான், துர்மதுகான், இது தவிர அப்சலாகானுடைய தமையன் பிள்ளைகள், பயில்வான்கான், மகாமானிகான் மகானுவயகான், பிலிசித்தகான், சங்கர்கான் இன்னும் சிறிது சூரர்களாயிருக்கப்பட்ட பேர் எல்லோருமாய் முஸ்தீப்புடனே வருகிறபோது சிவாஜிராஜா பட்டாகத்தி திருப்பிக்கொண்டு ஒருவரையும் கிட்டே வரவொட்டாமல் சுற்றிக்கொண்டு ஆகாசத்திலே கிளம்பி அங்கிருந்து கீழே வருவான். கீழே பார்த்தால் பக்கத்திலே காண்பிப்பான். பக்கத்திலே பார்க்கும் போது ஆகாசமார்க்கத்திலே கிளம்புவான்.

இப்படி நாலு திக்கும் பட்டாகத்தியினலே திருப்பிக்கொண்டு அவர் களுடைய கண் பார்வையிலே அகப்படாதபடிக்கு சுற்றிக்கொண்டிருக்கும்போது சிவாஜிராஜாவினுடைய சர்தார் கூட்டங்கள் வந்த பேர்வழி சம்பன், காவுகீபன், இங்களே, குண்டசிது, யேகோசிது, கிருஷ்ணசிது, சூரசிது, காண்ட்டகர், விசுவசிது, முருமகர், கரவீர், இப்ராம்கான், பர்பர்கான் இப்படிப்பட்ட மஹா வீரர்கள் சிமமகர்ஜனை பண்ணிக்கொண்டும் கத்திகளை உருவிக்கொண்டும் அப்சல்கானனுடைய சர்தார்களோடு எதிர்த்து யுத்தம் பண்ணத் தலைப் பட்டார்கள். அவர்களுடைய அட்டகாசம் ஆகாசம் வரைக்கும் வியாபித்தது. இப்படி ஒருவருக்கொருவர் அடிக்கும்போது அப்சல்கானனுடைய சர்தார்

கூட்டங்களிலே சிறிதுபேர் தலைகள் அறுந்து கீழே விழுந்தது. சிறிதுபேர் கை போனவனும், கால் போனவனும் இப்படியாய் அதமாய் போய்விட்டார்கள்.

இந்த சண்டை எப்போது நடந்ததென்றால் சாலியவாகன சகம் [1] சூருள அகெ-ஞ விகாரி [2] சம்வச்சரம் மார்சழி-மீ சுக்கில பட்சம் சப்தமி குருவாரம் மத்தியானம் சமயத்திலே தேவபிராமணர்களுக்கு கண்டகனாயிருக்கப்பட்ட அப்சலகான் செத்தான். அப்போது தென்றல்காற்று வெகு சீதமாய் வாசனைகளோடு அடிக்கத் தலைப்பட்டது. அதைப்பார்த்து பிராமணர்கள் வெகு சந்தோஷப்பட்டார்கள். சகலமான தேவதைகளும் வெகு சந்தோஷப்பட்டு தங்கள் தங்களுடைய ஸ்தானத்திற்குப் போனார்கள். சத்துருவுடைய சர்தார் கூட்டங்களை அடித்து ஜெயத்தோடு துர்க்கத்துமேலே ஜெயபேரிகை அடித்தார்கள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்

அந்த சப்தத்தைக்கேட்டு சிவாஜி ராஜாவினுடைய சர்தார் கூட்டங்கள் பதுங்கியிருந்தவர்கள் யாரென்றால் சவுலட்சிகன், கமலசித்து, யேதோசித்து, கங்கசித்து, தானசித்து, மல்லசூரன், குண்டசித்து, வற்கலன், ராமன், பாங்காரிகன் இப்படிப்பட்ட வீரர்கள் பதினயிர கால்தளம் நாராயணன் என்கிற பிராமணன் ஐயாயிரம் கால்தளம் இப்படி இருபது முப்பதினயிரங் கால்தளத்தோடு சத்துருவுடைய தளத்தைப்போய் மறித்தார்கள். அப்சலாகானுடைய சேனைகள் அப்சலாகான் செத்தகானென்று சமாச்சாரம் கேட்டு காபிரிப்பட்டு சிவாஜி ராஜாவினுடைய கால் தளங்கள் வழி மறித்ததைக் கண்டு அப்சலாகானுடைய சர்தார் கூட்டங்கள் மதம் போன யானைகள் போலே, விஷமபோன சர்பம் போலே, சிகரமில்லாத பர்வதம் போலே, ஜலமில்லாத மேகம்போலே, தனமில்லாத ராஜாவைப் போலே அப்சலாகானில்லாதபடியினாலே அப்படித்தோன்றிற்று.

அப்போது அப்சலாகானனுடைய பிள்ளைகள் மூன்று பேர் தகப்பன் செத்த சேதிகேட்டு சமுத்திரத்திலே ஓடம் முழுகினால் அந்த ஓடத்தில் இருக்கப்பட்ட ஜனத்துக்கு எப்படி ஜீவனுடைய ஆசை விட்டுப்போமோ அப்படியாயிற்று. அதன் பிறகு மகாசூரனாயிருக்கப்பட்ட முஸேகான் என்கிற பட்டாணி எஜமான் பெயரிலேயிருக்கப்பட்ட விசுவாசத்தினாலே ஓடிப்போகும் சர்தார் கூட்டங்களை நிறுத்தி அப்சலாகான் சுவாமி காரியத்திலே ஜீவன் திரணமாய் எண்ணி செத்தான். நீங்கள் ஓடிப்போகிறீர்களா? நாலு பக்கமும் மலையானபடியினாலே நீங்கள் எங்கே போகிறீர்கள். ஆகையினால் நின்று யுத்தம் பண்ணுங்கள் என்று ஓடிப்போகிறவர்களை விடாமல் மறித்து எமனைப்போலே பயங்கரனாயிருக்கப்பட்ட முஸேகான் கையிலே கத்திபிடித்துக்கொண்டு குதிரை மேலேறி சேனையைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அசனகான் என்கிறவனும்

1. சக வருஷம் 1581. 2. வருஷம்,

தன்னுடைய சேனையோடு அவனுடன்கூட வந்தான். அவர்களுக்கும் சிவாஜி ராஜாவினுடைய சேனைகளுக்கும் அப்புகளினாலேயும், கத்திகளினாலேயும், பட்டாவுகளினாலேயும், பாணங்களினாலேயும் சண்டை முத்திக்கொண்டது.

அப்போது கால் போனவனும் தலைபோனவனும் கைபோனவனும் உடல் இரண்டு துண்டமாய் போனவனும் இப்படி சின்னாபின்னமாய் முலைகானுடைய குதிரைபோய் கையிலேயிருக்கப்பட்ட கத்திபோய் பயந்து ஓடத்தலைப்பட்டான். யாகூத்துகான், அசனகான், அங்குசகான் அப்சலாகானுடைய மூத்தமகன் இவர்களெல்லோரும் வேஷம் மாற்றிக்கொண்டு ஓடிப்போவதை சிவாஜி ராஜாவினுடைய சேனை மறித்துக்கொண்டது.

இப்படியிருக்கும்போது ஷாஜிராஜாவினுடைய தம்பி மம்பாஜிராஜாவும் சத்துரு சேனைகளோடு யுத்தம்பண்ணி பராதுகானனுடைய பிள்ளை ரெண தூல்கானை பிடித்தான். இன்னும் சிறிது சர்தார் கூட்டங்களையும் பிடித்து பந்தனம் பண்ணினார்கள். அப்போது ஜெயவல்லி நகரத்துக்கு சமீபமாய் ரெண பூமியிலே அவரவர்களுடைய ஆயுதங்கள் ஆபரணங்களினாலேயும் அந்த ரெண பூமி நிறைந்தது. [1]பூத, பிரேத, சாகினி, டாகினிகளுக்கெல்லாம் சந்தோஷமாயிற்று.

இருபத்திமூன்றாம் அத்தியாயம்

அதன்பிறகு சிவாஜிராஜா தன்னுடைய சர்தார் கூட்டங்களை அழைத்து வெகு உபசாரம் சொல்லி வஸ்திரபூஷணங்கள் கொடுத்து சந்தோஷம் பண்ணி வைத்து சத்துருவுடைய சர்தார் கூட்டங்கள் அகப்பட்டபேரை எவரெவர்களை எப்படி சிட்சை பண்ணவேண்டுமோ அப்படி சிட்சை பண்ணினார். சத்துரு சேனைகளிலேயிருக்கப்பட்ட ஆயுதங்கள் வஸ்திர பூஷணங்கள் திரவியங்கள் இவற்றையெல்லாம் கொண்டுவந்து கோட்டையிலே சேர்த்தார்.

இதல்லாமல் முன்னே சிவாஜிராஜா இந்த அப்சலாகானை அடிக்க வேண்டுமென்று ஜெயவல்லி நகரத்துக்குப் புறப்படும்போது ஒரு குதிரை சர்தாரை சத்துருவுடைய ராஜ்பத்தைக் கட்டச்சொல்லி அனுப்பியிருந்தார். அவனும் அவ்விதம் காரியத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். இதல்லாமல் சத்துருவுடைய பாரிசத்திலிருந்து சிறிது சர்தார் கூட்டங்கள் சிவாஜிராஜாவினுடைய ராஜ்யத்தைக் கட்டுவதற்குப் புறப்பட்டிருந்தார்கள். அவர்களில் யாதவகான் என்கிறவன் சூராப்ப கெடியை வாங்கினான். டாண்டற்கானென்கிறவன் சிரோபல் நகரத்தை வாங்கினான். கராட்டகானன் சாகசவடம் என்கிற நகரத்தை வாங்கினான். இலாலுகான் என்கிறவன் பூனா ராஜ்யத்தைக் கட்டினான். சையிப்பு

1. பூத, பேத, சாகினி, டாகி என்றுளது.

கான் என்கிறவன் தலகொங்கணமென்கிற துருக்கத்தை சுவாதீனம் பண்ணிக் கொண்டான்.

இதல்லாமல் சிவாஜி ராஜாவினுடைய சர்தார் பார்த்து இவர்களை யெல்லாம் அடிக்கிறேனென்று ஏழாயிரம் குதிரை, ஏழாயிரம் காலதளங்கள் இவற்றோடு போகும்போது சிவாஜி ராஜா அந்தச சர்தாருக்குச் சொல்லி அனுப்பினது; அப்சலாகான் என்னோடெ சமாதானம் பண்ண வேண்டி செயவல்லி நகரத்துக்கு வந்திருக்கிறான். அந்த மனசு பார்த்துக்கொண்டு அதன் பிறகு நீ புறப்பட்டுபோ யென்று சொல்லி அனுப்பினதைக் கேட்டு அப்புறம் போகாமல் நடுவழியிலே தானேயிருந்தான். அதன் பிறகு அப்சலாகானுக்கும் சிவாஜி ராஜாவுக்கும் சண்டையான சேதி கேட்டு அந்த சர்தார் விராட தேசத்துக்கு வந்தான். இங்கே சிவாஜி ராஜா அப்சலாகானனை அடித்த பின்பு முலோகான் முதலான பேர் சண்டை போட்டு நிர்வாகமில்லாமல் நாலு திக்கும் ஓடுகிறபோது அந்தக் காட்டிலே வழிதெரியாமல் பயத்தினாலே கற்பாறை மறைவிலேயும் செடிமறை விலேயும் காட்டுமறைவிலேயும் ஒளிந்துகொண்டு சிவாஜிராஜாவினுடைய சிப்பாய்கள் இதோ வந்தார்கள் அதோ வந்தார்கள் அடிக்கவென்று காபிரிப் பட்டுக்கொண்டு அந்தக் காட்டிலே ஜனங்கள் ஓடும்போது கற்பாறைமேலே விழுந்து மடிந்துபோன பேரும், முட்களால் கிழிபட்டு காயம்பட்ட பேரும் இப்படியாக காபிரிப்பட்டுக்கொண்டிருக்கும்போது சந்திரராஜாவினுடைய தம்பி பிரதாப வர்மா என்கிறவன் நாலைந்து பேரோடு ஓடிப்போகிறவனை இவர்கள் கண்டு இவனுலல்லவோ இந்தமட்டுக்கும் நாசமாயிற்றென்று இவனை அடித்துப்போட வேண்டுமென்று வரும்போது அந்த பிரதாப வர்மா இந்த தலுக்கருடைய காலிலே விழுந்து நல்ல வார்த்தை சொன்னான்.

நல்லது ஆகட்டும். இந்தக்காட்டிலே ஒருவருக்கும் தெரியாமலிருக்கப்பட்ட வழிகளெல்லாம் உனக்குத் தெரியுமே எந்த வழியிலே ஆகட்டும். நம்மெல்லோரை யும் இந்தக் காடு தாண்டி அப்புறம் கொண்டுபோய் விடு. விராட தேசத்துக்குப் போய் உனக்கு உபகாரம் பண்ணுகிறேமென்று சொன்னான். அவனும் ஒருவருக் கும் தெரியாமலிருக்கப்பட்ட வழியிலே அழைத்துக்கொண்டு தகப்பன் விராட தேசத்திலே வைத்திருந்த யானை குதிரைகள் திரவியங்கள் பெண்கள் இவர்களை அழைத்துக்கொண்டு ஓடும்போது அந்த சிவாஜிராஜாவினுடைய சர்தார் முன்னே போயிருந்தவன் இந்த சேதி கேட்டு வந்து வளைத்துக்கொண்டான்.

அதன்பிறகு சிவாஜிராஜாவும் அல்லீஷாவினுடைய தேசத்தைக் கட்ட வேண்டுமென்று சேனையோடு கூச்சி நகரு அடித்துக்கொண்டு விராட தேசத்துக்கு வந்து சத்துரு கூட்டங்கள் எவரெவர் எங்கெந்த கெடிகள் கட்டினார் களோ அவர்களையெல்லாம் அடித்துக்கொண்டு விராட தேசத்துக்கு வந்து அந்த தேசங்களெல்லாம் கைவசம் பண்ணிக்கொண்டு

நிஷ்களங்கமாய்ப்பண்ணி கிருஷ்ணுதீரத்திலேயிருக்கப்பட்ட பிராமணர்களேயும் சேவித்து பின் தன்னுடைய சேனுபதியை முன்னே அனுப்பி குறை அல்லீ ஷாவினுடைய தேசங்களேக் கட்டவேண்டுமென்று சந்தனம் வந்தனம் என்ற இரண்டு கெடிகளே முற்றுகையிட்டுக்கொண்டிருக்கும்போது முன்னே அப்சல்கான் தெண்டம் பிடித்து துரத்திவிட்ட யாதவர்சள் வந்து சிவாஜிராஜாவுக்கு நமஸ்காரம் பண்ணி உபசாரம் பண்ணினபோது, நீங்கள் நம்முடையவர்களென்று வெகுமானம் பண்ணிஞர்.

அதன்பிறகு சிவாஜிராஜா கட்டுவாங்கம் என்கிற கெடி, மாயவனம், ராமபுரம், கலதவுடம், பால்லவர், ஆல்ஜெயம், அஷ்டநாமகம், வடக்கிராமம், வேலாபுரம், உதுமபுரம், சூரனுமகம், கராட்டனுமகம், சூரப்பனுமகம், பல்விஹுமகம், நேரளனுமகம், காமநகரம், விசுரர்மபுரம், பாவுனுமகம், உளான் நாமகம், கோலங், கரவீரபுரம் இப்படிப்பட்ட கெடிகளும் கோட்டைகளும் சுவாதீனம் பண்ணிக்கொண்டு அங்கேயிருக்கப்பட்ட ஜனங்களுக்கெல்லாம் அபயம் கொடுத்து தன்னுடைய அகத்திலே வைத்துக்கொண்டு பனுளா என்கிற கெடியை வந்து சுற்றிக்கொண்டார்கள். அந்தத் துருக்கத்திலேயிருக்கிறவர்கள மேகம்போலே கர்ஜினை பண்ணிக்கொண்டு பாணங்களினுலேயும் பீரங்கி யினுலேயும் அடித்தார்கள்.

சிவாஜிராஜாவினுடைய சர்தார் கூட்டங்களும் பாணங்கள் வரிஷிக்க அந்த பனுளா என்கிற கெடிமேலேறி குதித்து விழுந்து சத்துருஜனத்தை கத்திகளினுலே யுத்தம் பண்ணி அடித்து, அந்த துருக்கத்தை கைவசம் பண்ணிக்கொண்டு அங்கே சேனைகளெல்லாம் வைத்து தனக்கு ஆப்தமாயிருக்கிற சர்தார் கூட்டத்தோடு அங்கிருக்கப்பட்ட குளங்களும் நடவாவிகளும் சிங்காரத் தோட்டங் களும் ஆச்சரியகரமாயிருக்கப்பட்டதையெல்லாம் பார்த்து சந்தோஷகரமாய் இருந்தார். அதன்பிறகு அப்சலாகான் செத்துப்போன பிறபாடு தப்பி ஓடிப்போன சர்தார் கூட்டம் முஸேகான், பாசில்கான், யாகூத்கான், அங்குசகான், அசனகான், அபிசித்துகான் இவர்களெல்லோரும் விசையநகரம் போய்ச் சேர்ந்து தங்களுடைய எஜமானன் அல்லீஷாவுக்கு முசிரா பண்ணி தலைவணங்கிக் கொண்டு வெட்கத்தோடு நின்றுர்கள்.

இருபத்திநான்காம் அத்தியாயம்

அந்தப் பெரிய சருதாராயிருக்கப்பட்ட முஸேகானைப் பார்த்து அல்லீஷா சொன்னது; அப்சலாகான் சுவாமி காரியத்திலே வெகு சாகசம் பண்ணி யிருந்தாற்போலேயிருந்து செத்துப்போனுன். இனிமேல் விசனப்பட்டு காரிய மென்ன ? சிவாஜிராஜா கவடுபண்ணி ஒண்டியாய் அழைத்து காந்தமாயிருக்கிற இடத்திலே அப்சலாகானை அடித்துப்போட்டான். அவன் சேனையோடு இருந்தானுனல் அவனுக்கு இந்த அவதி வராது. சாகசம் பண்ணினத்தினுலே

காரியம் கூடி வரப்போகுதா, நல்லது ஆகட்டும். சிவாஜி ராஜா பாம்பினுடைய பல்லிலே தலைவைத்தான். ஆகையினால் அவனை உபேட்சைப் பண்ணியிருக்க லாகாது. நமக்கு வெகு அபகாரத்தைப் பண்ணியிருக்கிறான். ஆகையினால் சிம்மக்கெடியை வாங்கிக்கொண்டு பழிக்குப்பழி வாங்குவேன். சிவாஜி ராஜாவும் விராட தேசத்திலே வந்து சேனைகள் சேகரம் பண்ணிக்கொண்டு பனாளா என்கிற கெடியைச் சுற்றிக்கொண்டு இருக்கிறார்களென்று சேதி வந்திருக்கிறது.

ஆகவே நீங்களெல்லோரும் ஒன்றாய் அந்தந்த கெடிகளிலேயிருக்கிற சர்தார்களையும் கூட்டிக்கொண்டு சத்துருவை ஜெயிப்பதிலே உஷாராய் சேனையை முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு புறப்படுங்கள். பராதுகானனுடைய பேரன் ருஸத்து மகான் யுத்தத்திலே சமர்த்தன். அவனுக்கு சேனாதிபதியாய் பண்ணி காரியத்தைப் பாருங்களென்று சொன்னார். அந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டு சர்தார் கூட்டங்களெல்லாம் முசிரா பண்ணி விசைய நகரம் விட்டு வெளியே புறப்பட்டார்கள்.

இப்படியிருக்கும்போது சிவாஜிராஜா பனாளா கெடியை வாங்கினாரென்று அரிக்காரர் வந்து சேதி சொன்னார். அதனால் வெகு கோபத்தோடு அலீஷா சேனையை முஸ்தீப்பு பண்ணினாரென்று சிவாஜி ராஜா கேட்டு அந்த பனாளா கெடியை காப்பாற்றுவதற்கு பெரிய சர்தாராய் பார்த்து வைத்தான். சேனை முஸ்தீப்பு பண்ணிக்கொண்டு சத்துருவாயிருக்கப்பட்ட ருஸத்துமகானனுடைய எதிரே நடந்தார். அந்த ருஸத்து மகான் சிவாஜி ராஜாவினுடைய தளத்தைப் பார்த்து பாசில்கான் முதலான பேரோடு சொன்னது, சிவாஜி ராஜாவினுடைய தளம் வருவதைப் பாருங்கள். அந்த சேனையிலே மகாசூரனாய் பலசாலியாய் பேர்பெற்றவராய் சர்தார் கூட்டங்கள் வருகிறது. சிவாஜி ராஜாவும் தேவதை களுக்கு சமானமாய் இருக்கப்பட்டவன். ஆகையினால் நீங்கள் சர்தார் கூட்டங் களெல்லோரும் தங்கள் தங்களுடைய சேனையோடு முஸ்தீபாய் சண்டை முகத் திலே நில்லுங்கள். நானும் வில் அம்பு எடுத்துக்கொண்டு சேனைக்கு நடுவிலே நின்றுகொண்டு சேனையைக் காப்பாற்றுகிறேன். பாசில்கான் என்கிறவன் சேனை யோடு இடது பக்கத்திலே வரட்டும். சாதாத்துகான், மல்லீக்கு, இது பார்கான், வலது பக்கத்திலே வரட்டும். பத்தேகான், உல்லாக்காண் இவர்கள் இரண்டு பேரும் சேனைக்குப் பின் பக்கத்திலே காப்பாற்றிக்கொண்டு வரட்டும். கோர்ப்படேகான், சற்சாகான் இவர்கள் சேனையைச் சுற்றிலும் சுற்றிக்கொண்டு வரட்டும். இப்படி ருஸத்துமகான் வார்த்தையைக்கேட்டு முஸ்தீப்பு ஆனார்.

இந்த சேதி சிவாஜிராஜா கேட்டு தானும் தன்னுடைய சேனையும் கெருட யூகமாய் பண்ணிக்கொண்டு தன்னுடைய சர்தார் கூட்டங்களுக்குச் சொன்னது: தன்னுடைய சேனாதிபதி பாசில்கானோடு யுத்தம் பண்ணட்டும். வியாக்கிரமம் என்கிறவன் உல்லாக்கானனோடு யுத்தம் பண்ணட்டும். இங்களே என்பவன்

மல்லீக்கு, இதுபார்கான் இவர்களோடு சண்டை பண்ணட்டும். மாகாத்திரிகன் பத்தேகானை அடிக்கட்டும். கோந்து என்கிறவன் கோர்ப்படேகானோடு யுத்தம் பண்ணட்டும். கராட்டன், பாண்டர் இவர்கள் இரண்டுபேரும் சேனைக்கு வலது புறத்திலே ரெட்சித்துக்கொண்டு வரட்டும். இலால், யாதவன் இருவரும் நம்முடைய சேனைக்கு இடதுபுறத்திலே ரெட்சித்துக்கொண்டு வரட்டும். நான் சேனைக்கு சர்தாராயிருக்கப்பட்ட ருஸ்த்துமகானோடு யுத்தம் பண்ணுகிறேன். இவ்விதம் சொன்ன சிவாஜிராஜா வார்த்தையைக் கேட்டு அவரவர்கள் அப்படியே முஸ்தீப்பாய் நடந்தார்கள்.

அப்போது இரண்டுபேர்களுடைய சேனைகளிலேயும் [1] நவபத்து நகாரு சப்தத்தினாலே நாலுதிக்கும் பிரதித்தொனியுண்டாகத் தலைப்பட்டது. நிசானங்களுடைய காந்தியினாலே ஆகாசத்திலே சித்திரங்கள் எழுதினாற்போல் தோன்றிற்று. இரண்டு சேனைகளையும் பார்த்தால் கீழ்சமுத்திரம் மேல் சமுத்திரம் ஒன்றாய் கூடினாலெப்படியோ அப்படி யுத்தத்துக்கு கைகலந்தது. இரண்டுபேருடைய சர்தார் கூட்டங்களும் ஒருவருக்கொருவர் நேர்ந்துகொண்டு சண்டை பண்ணத் தலைப்பட்டார்கள். குதிரைகளுடைய காலடிகளினாலே தூள் கிளம்பி ஆகாயம் நிறையத் தலைப்பட்டது. ஒருவருக்கொருவர் பாணங்களினாலேயும், கத்திகளினாலேயும், பட்டாகத்திகளினாலேயும் வெட்டிக்கொண்டு சண்டைபண்ணத் தலைப்பட்டார்கள். எதிரேயுள்ளவன் வில்லிலே அம்புவைத்து அடிக்கும் முன்னே அவனுக்கு எதிரேயிருக்கிறவன் இவன் கையை அறுத்து கீழே தள்ளுவான். நிசானுகள் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களுடைய தலையை வெட்டி தலை கீழே விழுந்தாலும் அந்த நிசானை கைவிடாமல் நிசானோடு கீழே விழத்தலைப்பட்டார்கள்.

இப்படி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொண்டிருக்கும் போது சிவாஜி ராஜா தத்தம் ஜனத்தோடு ருஸ்த்துமகானன் மேலே போய் சண்டைபோட்டு அடிக்கும் போது அவனுக்கு நிர்வாகமில்லாமல் பின் வாங்கினான். சிவாஜி ராஜா பாரிசத்திலிருக்கிற சிப்பாய்கள் பாணங்களினாலே துலுக்கருடைய தலையை அறுத்து கீழே தள்ளத தலைப்பட்டார்கள். சிவாஜி ராஜாவினுடைய சேனாதிபதி பாசில் கானனை காற்றிலே அகப்பட்ட மேகம் எப்படி ஓடுமோ அப்படி ஓடிப்போக அடித்தான். சிப்பாய்கள் காயங்களிலே இரத்தம் பெருகி ஆறாய் ஓடி அதிலே கைகள் கால்கள் தலைகள் வெட்டுபட்டு விழுந்ததெல்லாம் மிதந்துகொண்டுபோகத் தலைப்பட்டது. சிவாஜி ராஜா பாரிசதது சர்தார் கூட்டங்களினாலே எதிரியாயிருக்கப்பட்ட ருஸ்த்துமகானுடைய சர்தார் கூட்டங்கள் அடிபட்டு பின் வாங்கினார்கள். ருஸ்த்துமகான், பாசில்கான் இவர்கள் இரண்டுபேரும் கத்தியைக் கீழே போட்டு விட்டு ஐந்தாறு குதியோடு ஓடிப்போய் விட்டார்கள். குறையிருந்த சேனையெல்லாம் நாலுதிக்கும் ஓடிப்போய்விட்டது. சிறிது சர்தார் கூட்டங்கள் சிவாஜி ராஜாவுக்கு சரணமாய் வந்தார்கள்.

1. 'நகபத்து' என்றுளது.

पित्तदाहप्रदं नृणां तदेतच्चातिसेवनात् । — राजनिघण्टुः

குதிரை மாம்சம் துவர்ப்புச் சுவையுடையது பசித்தீயை வளர்க்கிறது; கபம், பித்தம் இவற்றை உண்டாக்கும், வாயுவைக் கண்டிக்கும், உடம்பைத்தேற்றுகிறது. வலுவை உண்டுபண்ணுகிறது, கண்ணுக்கு நலம் செய்யும், இனிப்பானது, எளிதில் ஜீரணமாகும். (பாவபிரகாசம்)

குதிரை மாம்சம் அதிகமாக உண்டால் மனிதர்களுக்கு, பித்தம், எரிச்சல் இவை உண்டாகின்றன. (ராஜநிகண்டு)

ஒட்டக மாம்சத்தின் குணம்—

उष्ट्रमांसं लघु स्वादु चक्षुष्यमनिलापहम् ।
उष्णमर्शःप्रशमनं मेदःपित्तकफापहम् ॥ — राजनिघण्टुः

ஒட்டக மாம்சம்—எளிதில் ஜீரணமாகக்கூடியது. இனிப்பானது. கண்ணுக்கு நலம்செய்யும் வாயுவைப் போக்கும், வெப்பத்தைத்தரும், மூலநோயை (Piles) நீக்கும். கொழுப்பு, பித்தம், கபம் ஆகியவற்றைக்குறைக்கும். (ராஜநிகண்டு)

யானை மாம்ச குணம்—

विरूक्षणो लेखनश्च वीर्योष्णः पित्तदूषणः ।
स्वाद्वम्ललवणस्तेषां गजः श्लेष्मानिलापहः ॥ — सुश्रुतसंहिता

யானை மாம்சம்—வறட்சியை உண்டுபண்ணும். உடம்பை இளைக்கச் செய்யும், வெப்பத்தை உண்டாக்கும், பித்தத்தைக்கெடுக்கும். இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு ஆகிய சுவைகளைக்கொண்டது. கபம், வாயு இவற்றைக்கண்டிக்கும். (ஸுச்ருத ஸம்ஹிதா)

எருமை மாட்டு மாம்சத்தின் குணம்—

स्निग्धोष्णमधुरो वृष्यो महिषस्तर्पणो गुरुः ।
निद्रापुंस्त्वबलस्तन्यवर्धनो मांसदार्ढ्यकृत् ॥ — सुश्रुतसंहिता

... सृष्टविण्मूत्रं वातपित्तास्रनाशनम् । — भावप्रकाशः

எருமை மாட்டு மாம்சம்—நெய்ப்புடையது, வெப்பத்தை உண்டாக்கும், ஆண்மையை வளர்க்கிறது, உடம்பைத்தேற்றுகிறது, எளிதில் ஜீர்ணமாகக் கூடியதல்ல, தூக்கம், ஆண்மை வலு, முலைப்பால் ஆகியவற்றை வளர்க்கிறது, தசைகளுக்கு உறுதியை உண்டாக்குகிறது. (ஸுச்ருத ஸம்ஹிதா)

(எருமை மாட்டு மாம்சம்) மலம், மூத்திரம் இவற்றை வெளியேற்றுகிறது. வாயு, பித்தம், ரக்தம் ஆகியவை சம்பந்தப்பட்ட நோய்களை நீக்குகிறது.

(பாவப்பிரகாசம்)

புலி மாம்சத்தின் குணம் —

द्वीपी स्निग्धो भवेच्चोष्णो मधुरो लघुदीपनः ।
वातघ्नः पित्तशमनो बल्यो वृष्यो रुचिप्रदः ॥ — धन्वन्तरि निघण्टुः

புலியின் மாம்சம் — நெய்ப்புடையது. வெப்பத்தைக்கொடுக்கும், இனிப்பானது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியது, பசித்தீயைத் தூண்டுகிறது, வாயு, பித்தம் இவற்றைக் கண்டிக்கும். வலுவையுண்டாக்கும், ஆண்மையை வளர்க்கும். ருசியைத்தரும்.

(தன்வந்தரி நிகண்டு)

காண்டாமிருக மாம்சத்தின் குணம் —

कफघ्नं खड्गिपिशितं कषायमनिलापहम् ।
पित्र्यं पवित्रमायुष्यं बद्धमूत्रं विरूक्षणम् ॥ — सुश्रुतसंहिता

காண்டாமிருகத்தின் மாம்சம்—கபத்தைக் கண்டிக்கும். துவர்ப்புச்சுவையுடையது. வாயுவைப்போக்கும். சிராத்தம் முதலிய பிதுருகார்யங்களில் ஏற்றது. பவித்ரமானது ஆயுளை வளர்க்கிறது. மூத்திரத்தைக் குறைக்கிறது வறட்சியை உண்டாக்குகிறது.

(ஸுச்ருத ஸம்ஹிதா)

மான் மாம்சத்தின் குணம் —

एणमांसं हिमं रुच्यं ग्राहि दोषत्रयापहम् ।
षड्रसं बलदं पथ्यं लघु हृद्यं कफास्रजित् ॥ — धन्वन्तरिनिघण्टुः

மானின் மாம்சம்—குளிர்மையானது ருசியை உண்டாக்குகிறது. இளகிப்போகும் மலத்தைக் கட்டும். வாயு, பித்தம், கபம் ஆகிய மூன்று தோஷங்களின் கோபத்தையும் குறைக்கிறது. அறுவகைச்சுவைகளையும் உடையது, வலுவைக் கொடுக்கிறது, இதமானது, எளிதில ஜீர்ணமாகக்கூடியது. இதயத்திற்கு நலம் செய்யும், கபம், ரக்தம் ஆகியவற்றின் சம்பந்தமான நோய்களைப்போக்கும.

(தன்வந்தரி நிகண்டு)

கவரிமான் மாம்சத்தின் குணம் —

वातपित्तोपशमनं गुरु शुक्रप्रवर्धनम् ।
तथा चमरमांसं तु स्निग्धं मधुरकासजित् ॥ — सुश्रुतसंहिता

கவரிமான் மாம்சம்—வாயு, பித்தம் ஆகியவற்றைக் குறைக்கிறது, எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல, விந்துவை வளர்க்கிறது. நெய்ப்புடையது, இனிப்பானது. இருமலைப்போக்குகிறது. (ஸுச்ருத ஸம்ஹிதா)

வெண்ணிறமுடைய மான் மாம்சத்தின் குணம்—

हरिणः शीतलो बद्धविण्मूत्रो दीपनो लघुः ।
रसे पाके च मधुरः सुगन्धिः सन्निपातहा ॥ — भावप्रकाशः

வெண்ணிறமுடைய மான் மாம்சம்—குளிர்ச்சியானது, மலம், மூத்திரம் ஆகியவற்றைக் கட்டுகிறது, பசியைத் தூண்டுகிறது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியது. சுவையிலும் ஜீர்ணமான பின்பும் இனிப்புத்தன்மை கொண்டது. நல்லமண முடையது. ஜன்னி நோயைப்போக்கும். (பாவப்பிரகாசம்)

கருநிறக் கோடுகளுடைய மான் மாம்சத்தின் குணம்—

रुरोर्मांसं समधुरं कषायानुरसं स्मृतम् ।
वातपित्तोपशमनं गुरु शुक्रप्रवर्धनम् ॥ — सुश्रुतसंहिता

संग्राही रोचनो बल्यो ज्वरप्रशमनः स्मृतः । — भावप्रकाशः

கருநிறக்கோடுகளுடைய மான் மாம்சம்—இனிப்பானது துவர்ப்பை துணைச்சுவையாகக் கொண்டது, வாயு பித்தம் ஆகியவற்றைக் கண்டிக்கிறது. எளிதில் ஜீர்ணமாகக் கூடியதல்ல, விந்துவை அதிகப்படுத்துகிறது. (ஸுச்ருதஸம்ஹிதா)

கருநிறக்கோடுகளுடைய மான் மாம்சம்—மலத்தைக்கட்டுகிறது, ருசியைத் தருகிறது, வலுவை உண்டாக்குகிறது ஜ்வரத்தைப்போக்குகிறது. (பாவபிரகாசம்)

தொங்குதாடையற்ற மான் மாம்சத்தின் குணம்—

गवयस्य तु मांसं हि स्निग्धं मधुरकासजित् ।
विपाके मधुरं चापि व्यवायस्य तु वर्धनम् ॥ — सुश्रुतसंहिता

தொங்கு தாடையற்ற மானின் மாம்சம்—நெய்ப்புடையது. இனிப்பானது. இருமலைப் போக்குகிறது. ஜீர்ணமான பின்பும் இனிப்புத் தன்மையையே யுடையது. புணர்ச்சித்திறமையை வளர்க்கிறது. (ஸுச்ருதஸம்ஹிதா)

பன்றி மாம்சத்தின் குணம்—

स्नेहनं बृंहणं वृष्यं श्रमघ्नमनिलापहम् ।
वराहपिशितं बल्यं रोचनं स्वेदनं गुरु ॥ — चरकसंहिता

பன்றியின் மாம்சம்-நெய்ப்புடையது. உடம்பைத் தேற்றுகிறது. விந்துவை அதிகப்படுத்துகிறது. ஓய்ச்சல், வாயு இவற்றைப் போக்குகிறது. எலுவை உண்டுபண்ணுகிறது. ருசியைத் தருகிறது. வியர்வையை உண்டாக்குகிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல (சரகஸம்ஹிதா)

முள்ளம்பன்றி மாம்சத்தின் குணம்—

शल्लको मधुराम्लश्च विपाके कटुकः स्मृतः ।
वातपित्तकफघ्नश्च कासश्वासहरस्तथा ॥ — चरकसंहिता

... ... लघुः शीतो विषापहः । — भावप्रकाशः

முள்ளம்பன்றியின் மாம்சம்-இனிப்பு, புளிப்பு ஆகிய சுவைகளையுடையது. ஜீர்ணமான பின்பும் கார்ப்புத் தன்மையுடையது. வாயு, பித்தம், கபம் இவற்றைக் கண்டிக்கும். இருமல், இரைப்பு இவற்றையும் போக்கும். (சரகஸம்ஹிதா)

எளிதில் ஜீர்ணமாகக்கூடியது குளிர்மையானது. விஷத்தைப்போக்குவது. (பாவப்ரகாசம்)

முயல் மாம்சத்தின் குணம்—

कषायमधुरस्तेषां शशः पित्तकफापहः । — सुश्रुतसंहिता

.... प्रशस्तश्च सन्निपातेऽनिलाज्वरे ॥ — चरकसंहिता

ज्वरातीसारशोषास्रश्वासामयहरश्च सः । — भावप्रकाशः

முயல் மாம்சம்-துவர்ப்பு, இனிப்பு ஆகிய சுவையுள்ளது. பித்தம், கபம், ஆகியவற்றைப் போக்கும் (சுச்ருதஸம்ஹிதா)

வாயு சிறிது குறைவாயிருக்கும் சன்னிநோயில் சிறந்தது, (சரகஸம்ஹிதா)

ஜ்வரம், பேதி, க்ஷயம், ரக்த சம்பந்தமான நோய், இரைப்பு (Asthma) இவற்றைக் கண்டிக்கிறது. (பாவப்ரகாசம்)

ஆமை மாம்சத்தின் குணம்—

वर्ण्यो वातहरो वृष्यश्चक्षुष्यो बलवर्धनः ।
मेधास्मृतिकरः पथ्यः शोषघ्नः कूर्म उच्यते ॥ — चरकसंहिता

ஆமையின் மாம்சம்—நல்ல நிறத்தைக் கொடுக்கும். வாயுவைக் கண்டிக்கும். ஆண்மையை வளர்க்கும். கண்ணுக்கு நலம் செய்யும் எலுவை வளர்க்கும். அறிவு, ஞாபகசக்தி இவற்றை உண்டாக்குகிறது. இதமானது. க்ஷயத்தைப் போக்குகிறது. (சரகஸம்ஹிதா)

குரங்கு மாம்சத்தின் குணம்—

वानरः पवनश्वासमेदःपाण्डुक्रिमीञ्जयेत् ।
संतर्पणो वृष्यतमः श्लेष्मलो बलवर्धनः ॥ — सुश्रुतसंहिता

குரங்கின் மாம்சம்—வாயு, இளைப்பு, கொழுப்பு, சோகை, கிருமி இவற்றைப் போக்கும். உடம்பைத் தேற்றும். ஆண்மையை வளர்ப்பதில் மிகவும் சிறந்தது. கபத்தை உண்டாக்கும். வலிமையை வளர்க்கும். (சுச்ருதஸம்ஹிதா)

உடும்பு மாம்சத்தின் குணம் —

गोधा विपाके मधुरा कषायकटुका रसे ।
वातपित्तप्रशमनी बृंहणी बलवर्धनी ॥ — चरकसंहिता

உடும்பின் மாம்சம்—துவர்ப்பு, கார்ப்பு ஆகிய சுவைகளையுடையது. ஜீர்ணமானபின்பும் இனிப்புத்தன்மையைக் கொண்டது. வாயு, பித்தம் இவற்றைக் கண்டிக்கும். உடம்பைத் தேற்றும். வலுவை உண்டாக்கும். (சரகஸம்ஹிதா)

பாம்பு மாம்சத்தின் குணம்—

दुर्नामानिलदोषघ्नाः कृमिदूषीविषापहाः ।
चक्षुष्या मधुराः पाके सर्पा मेधाग्निवर्धनाः ॥ — सुश्रुतसंहिता

பாம்பின் மாம்சம்—மூலநோய், வாயு, இவற்றைக் கண்டிக்கும். கிருமி இடுவிஷம் இவற்றைப் போக்கும். கண்ணுக்கு நலம் செய்யும். ஜீரணமானபின்பு இனிப்புத் தன்மையை உடையது. அறிவு, பசித்தீ இவற்றை வளர்க்கிறது. (சுச்ருதஸம்ஹிதா)

எலி மாம்சத்தின் குணம்—

मूषको मधुरः स्निग्धो व्यवायी शुक्रवर्धनः । — धन्वन्तरिनिघण्टुः

எலியின் மாம்சம்—இனிப்பானது, நெய்ப்புடையது, புணர்ச்சித் திறமையை பெருக்கும், விந்துவை வளர்க்கிறது. (தன்வந்தரி நிகண்டு)

தவளை மாம்சத்தின் குணம்—

मण्डूकः श्लेष्मलो नातिपित्तलो बलकारकः । — धन्वन्तरिनिघण्टुः

தவளையின் மாம்சம்—கபத்தை அதிகப்படுத்தும், பித்தத்தை அதிகமாக உண்டாக்குவதல்ல, வலிமையை உண்டுபண்ணும். (தன்வந்தரி நிகண்டு)

நண்டு மாம்சத்தின் குணம் —

कुलीरः परमं वृष्यो बृंहणः प्रीणनो गुरुः ॥ — अष्टाङ्गसंग्रहः

நண்டின் மாம்சம் ஆண்மையை மிகவும் வளர்க்கிறது. உடம்பைத் தேற்றுகிறது. திருப்தியை உண்டுபண்ணுகிறது எளிதில் ஜீர்ணமாகக்கூடியது அல்ல. (அஷ்டாங்க ஸங்கிரஹம்)

கோழி மாம்சத்தின் குணம்—

स्निग्धाश्चोष्णाश्च वृष्याश्च बृंहणाः स्वरबोधनाः ।
बल्याः परं वातहराः स्वेदनाश्चरणायुधाः ॥ — चरकसंहिता

கோழியின் மாம்சம்—நெய்ப்புடையது. வெப்பத்தை உண்டுபண்ணக் கூடியது. ஆண்மையை வளர்க்கின்றது. உடலைத்தேற்றுகிறது குரலைத் தெளிவுறுத்துகிறது. வன்மையைத் தருகிறது. வாயுவைக் கண்டிப்பதில் சிறந்தது. வியர்வையை உண்டாக்குகிறது. (சரகஸம்ஹிதா)

மயில் மாம்சத்தின் குணம் —

दर्शनश्रोत्रमेधाग्निवयोवर्णस्वरायुषाम् ।
बर्ही हिततमो बल्यो वातघ्नो मांसशुक्रलः ॥ — चरकसंहिता

कषायस्वादुलवणस्त्वच्यः केश्योऽरुचौ हितः । — सुश्रुतसंहिता

மயில மாம்சம்-கண், காது, அறிவு, பசித்தீ, வயது, நிறம், குரல், ஆயுள் இவற்றிற்கு மிகவும் நலம் செய்யும். வலுவை உண்டாக்கும். சதை, விந்து இவற்றை வளர்க்கும். (சரகஸம்ஹிதா)

துவர்ப்பு இனிப்பு, உவர்ப்பு ஆகிய சுவைகளையுடையது. சருமத்திற்கும் கூந்தலுக்கும் நலம செய்யும். ருசியின்மையில் இதமானது. (ஸுச்ருதஸம்ஹிதா)

அன்னப்பறவை மாம்சத்தின் குணம்—

गुरूष्णस्निग्धमधुराः स्वरवर्णबलप्रदाः ।
बृंहणाः शुक्रलाश्चोक्ता हंसा मारुतनाशनाः ॥ — चरकसंहिता

அன்னப்பறவையின் மாம்சம்—சுகமாக ஜீர்ணமாகக்கூடியதல்ல. வெப்பத்தை உண்டுபண்ணும், நெய்ப்புடையது, இனிப்பானது. ஒளி, நிறம் இவற்றிற்கு மேன்மையை உண்டாக்குகிறது. உடம்பைத் தேற்றுகிறது. விந்துவை அதிகப்படுத்துகிறது, வாயுவைப் போக்குகிறது. (சரகஸம்ஹிதா)

சக்ரவாகப்பறவை மாம்சத்தின் குணம்—

चक्रवाको महास्निग्धः शुक्रलो गुरुरेव च ।
बल्योऽथ रुचिकृद्वातहरः ... ... ॥ — धन्वन्तरिनिघण्टुः

சக்ரவாகப்பறவையின் மாம்சம்-மிகவும் நெய்ப்புடையது, விந்துவை வளர்க்கிறது. எளிதில் ஜீர்ணமாகக்கூடியதல்ல. வலுவைக் கொடுக்கிறது. ருசியை உண்டுபண்ணுகிறது, வாயுவைக் கண்டிக்கிறது. (தன்வந்தரிநிகண்டு)

காக்கை, பாஸம் இவற்றின் மாம்சத்தின் குணம்—

काकभासभवं मांसं चक्षुष्यं दीपनं लघु ।
आयुष्यं बृंहणं बल्यं क्षतदोषक्षयापहम् ॥ — धन्वन्तरिनिघण्टुः

காக்கை, பாஸம் என்னும் பறவை இவற்றின் மாம்சம்-கண்ணுக்கு நலம் செய்யும். பசியைத் தூண்டுகிறது எளிதில் ஜீர்ணமாகக்கூடியது. ஆயுளை வளர்க்கக்கூடியது. உடம்பைத் தேற்றும். விரணம், க்ஷயரோகம் இவற்றைப் போக்கும். (தன்வந்தரிநிகண்டு)

குயில் மாம்சத்தின் குணம்—

कोकिलो बृंहणः प्रोक्तः मधुरो बलवर्धनः ।
... ... ग्राही चक्षुष्यः कफवातजित् ॥ — धन्वन्तरिनिघण्टुः

குயிலின் மாம்சம்-உடம்பைத் தேற்றுகிறது இனிப்பானது, வலுவை வளர்க்கிறது. இளகிப்போகும் மலத்தைக் கட்டுகிறது. கண்ணுக்கு நலம் செய்யும். கபம், வாதம் ஆகியவற்றைக் கண்டிக்கும். (தன்வந்தரிநிகண்டு)

சிறுவாய்ச்சாத்தான் மாம்சத்தின் குணம்—

मेघानलकरा हृद्याः क्रकराः । — अष्टाङ्गहृदयम्

சிறுவாய்ச்சாத்தானின் மாம்சம்-அறிவு, பசித்தீ இவற்றை வளர்க்கிறது. இதயத்திற்கு நலம் செய்கிறது. (அஷ்டாங்க ஹிருதயம்)

